Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை ரூபா 5:00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 16 (28.02.94) திங்கட்கிழமை ஓசை 10

## உயர் கல்வி மாணவருக்கு தொழில்நுட்ப அறிவுவழங்க திட்டம்

உயர் கல்வித் துறையில் தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு புதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார். 21-ம் நூற்றாண்டின் நவீன தொழில்நுட்ப உலகிற்குப் பொருத்தமான முறையில் கல்விமுறை அமைந்திருக்க வேண்டும் இந்த இலக்கை அடைவதற்கென உயர்கல்வி அமைச்சின் கீழ் தொழில்நுட்பக்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு புதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி உயர் வகுப்பு மாணவர்களிடையே தொழில்நுட்ப அறிவை ஏற்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள் அமைக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

### இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

# மத அமைப்புக்களுடன் அரசாங்கம் ரகசிய உடன்பாட்டிற்கு வரவில்லை!

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

**மதரீதியான அமைப்புக்களுடனோ அன்றி அரசசார்பற்ற நிறுவனங்களுடனோ பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் அரசு ஒரு அரசியல் இணக்கத்துக்கும் வரவில்லை. இரகசியமாக மேற்கொள்ளும் விடயங்கள் பல அனுபவத்தின்படி, சந்தேகங்களிலேயே முடிவடைந்துள்ளன. தோல்வியும் கண்டுள்ளன என சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கொழும்பு தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

அரசு கடந்த சில மாதங்களில் தெரிவித்த பதில் பிரபாகரனிடமிருந்தேவரவேண்டும், என்பதே பேச்சுக்கள் குறித்து என்ன கருத்துக் கொண்டுள்ளார் என்பதிலேயே சகல முயற்சிகளும் தங்கியுள்ளது. பிரபாகரனிடமிருந்து புலிகளின் நிலைப்பாடு தெளிவாக வெளிப்படும் நிலையில் முன் நிபந்தனையற்ற பேச்சுகளுக்கான சூழ்நிலைகூடத் தோன்றலாம்.

ஜனாதிபதியின் அண்மைக் காலப் பேச்சுகள் தவறான அர்த்தத்துடன் நோக்கப்படுகிறது. இதை வைத்து தேசிய இனப்பிரச்சினையில் கதவை மூடக்கூடாது. ஜனாதிபதி பிரேமதாசாவுடனான விடுதலைப் புலிகளின் பேச்சுகள் நிபந்தனையற்றவையாக இருந்தன இதில் எந்தமுடிவும் காணப்படவில்லை இன்றைய நிலையில் ஜனாதிபதி விஜேதுங்கா பிஸ்கட் வழங்கியோ அல்லது செலவுத்தானங்கள் மேற்கொள்ளவோ பேசுவதில்லை எனக் கூறியுள்ளார். இன்றைய நிலையில் பிரபாகரன் தனது நிலைப்பாட்டை முன்வைப்பதே அவசியமானது. புலிகளின் நிலைப்பாடு தெரியும் நிலையிலேயே எமது கட்சிகளிடையே ஒரு பொதுவான நிலைப்பாட்டை காண முடியும்.

இரகசியமாக மேற்கொள்ளும் விடயங்கள் அனுபவத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வாராந்த செய்தியாளர் மாநாடு மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இதுவரை இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு நிலைகுறித்த வாராந்த செய்தியாளர் மாநாடு மீண்டும் மார்ச் மாத நடுப்பகுதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி முதலாவது செய்தியாளர் மாநாடு மார்ச் 15ஆம் திகதி நடைபெறும். இதில் பாதுகாப்புச் செயலர்' ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர், இராணுவப் பேச்சாளர், தகவல்துறை அமைச்சர் ஆகியோர் கலந்து கொள்வர்.

வெளிநாட்டு பத்திரிகையாளர்களின் கோரிக்கையை அடுத்து தகவல்துறை அமைச்சர் டிரோன் பெர்னான்டோ இதற்கான உறுதிமொழியை அளித்துள்ளார்.

### இன்றும் நாளையும்

## தாண்டிக்குளம் ஊடாக போக்குவரத்து தடை

### சிறிலங்கா பொலிசார் அறிவிப்பு

வவுனியா நகரசபை தேர்தல்கள் நாளை நடைபெறவுள்ளதையடுத்து வவுனியா தாண்டிக்குளம் ஊடாக பய... டிக்குளம் ஊடாக போக்குவரத்து தடைசெய்யப்படும் எனவும் நகரசபை தேர்தலுக்கான பாதுகாப்புக்கருதியே

## விமான தாக்குதலில் ஒருவர் காயம்

அல்லிப்பளைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டது முன்னர் அறிந்ததே. மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து இணுவிலில் தற்சமயம் வசித்து வந்த சின்னையா பஞ்சலிங்கம் (41வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் தற்சமயம் சிகிச்சைக்கென யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார். இவருக்கு மார்புக்கு கீழ்ப்பகுதி மற்றும் கைகளில் காயம் ஏற்பட்டுள்ளது.

## ஒரு புலிக்கு சமனாக நான்கு சிப்பாய் தேவை

### ராணுவம் பலவீனப்பட்டுவிட்டது

(கொழும்பு)

1983 இல் ஒரு சிறிலங்கா இராணுவ சிப்பாய் நான்கு புலிகளுக்கு சமனாக இருந்தார் ஆனால் இப்போது ஒரு புலி நான்கு சிறிலங்கா இராணுவச் சிப்பாய்களுக்கு சமமாக இருக்கிறார். எனவே படையினருக்கு போதிய பயிற்சி, உபகரணங்கள் வழங்கப்படவேண்டும் என சுதந்திரக்கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், தேர்தலுக்காக அதிக படையினர் கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு தேர்தல் முக்கியமா? வடக்கு யுத்தம் அவசியமா? தேர்தலுக்காக வடக்கில் யுத்தமுனைப்பை பலவீனப்படுத்தவேண்டாம் புதிய இராணுவ, விமானப்படைத் தளபதிகள் திறமையானவர்கள். இவர்கள் யுத்தத்தில் வெல்வர் என நம்புகிறோம் எனவும் குறிப்பிட்டார்.

## தேர்தல்களுக்குமுன் புதிய தேர்தல் ஆணையாளர்

எதிர் வரும் பாராளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் புதிய தேர்தல் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட இருப்பதாக ... யாளர் நியமனத்திற்காக சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் ஆலோசனையும் பெறப்பட்டு வருவதாக கொழும்பு பத்தி

## ஐ.நா. ஸ்தாபன அதிகாரிகள்

... தாண்டிக்குளம் ஊடாக பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் தாண் ... நகரசபைத் தேர்தலுக்கான பாதுகாப்புக்கருதியே இந்நடவடிக்கை எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா. ஸ்தாபன அதிகாரிகள் விடுதலைப்புலிகள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்திருக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அதிகாரிகள் நேற்று விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்.

சுமுகமான முறையில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற இப் பேச்சுவார்த்தைகளின் போது வடபகுதியில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயம் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் சார்பில் வவுனியா மாவட்டவதிவிடப் பிரதிநிதி திரு. டேவிட் அற்றின், ஜெனிவா அலுவலக அதிகாரி திரு. லீக்கோ, ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்சபையின் அதிகாரி திரு. மல்கம் ஆகியோரும், விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கமும் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளுடன் தாம் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை தாம் ஜெனிவா தலைமை அலுவலகத்துக்கு அறிவித்துள்ளதாக திரு. டேவிட் அற்றின் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். தமது நடவடிக்கைகளுக்கு ஜெனிவா அலுவலகம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(க)(நி)

... தோதல், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் புதிய தேர்தல் ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட இருப்பதாக தெரிய வருகின்றது.

இந்த தேர்தல் ஆணை ... ாக சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் ஆலோசனையும் பெறப்பட்டு வருவதாக கொழும்பு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## புலிகளுடன்பேச்சுநடத்தவே கடற்தடைச் சட்டம் நீக்கம்

### உயர் அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்கும் நோக்கில் வடக்கு கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதாக உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹெந்தல' கப்பல் இன்று மாவுடன் வந்து சேரும்

(வடமராட்சி)

திருகோணமலை துறைமுகத்திலிருந்து புறப்பட்ட 'ஹெந்தல' கப்பல் மாவுடன் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும்.

அதேசமயம் மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை நோக்கி 'மாகோ' கப்பல் புறப்பட்டது. இக் கப்பலுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## நகரசபைத் தேர்தலை முன்னிட்டு வவுனியாவில் விமானக் குண்டுவீச்சு

### சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

நாளை நடைபெறவுள்ள வவுனியா நகரசபைத் தேர்தலை முன்னிட்டு வவுனியாவில் கடந்த புதனன்று விமானத்தாக்குதலும் நடைபெற்றது என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின. வவுனியாவில் அட்டம்பகஸ்கட என்னும் பகுதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரணுக்கு அப்பாலாக இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதிகாலையில் விமானத் தாக்குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. குண்டுத் தாக்குதல்களின் ஒலி நான்கு மைல்களுக்கு அப்பாலுள்ள வவுனியா நகரிலும் கேட்டது.

இந்த இராணுவ நிலைக்கு அப்பால் சந்தேகத்திற்கு இடமான நடமாட்டங்கள் தென்பட்டதையடுத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என கூறப்படுகிறது சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

## வட பகுதிகளில் சிறு திட்டங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர். உதவும்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயம் வடபகுதியின் உள்ளூர் அரசசார்பற்றநிறுவனங்களிடமிருந்து வரும் சிறு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியளிக்க முன்வந்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் சிறு செயற் திட்ட நடவடிக்கையின் கீழ் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு உதவியளிக்க முன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள்அமைச்சர்ரொனி பா. உ. வாக பதவி ஏற்பார்?

(கொழும்பு)

முன்னாள் நிதியமைச்சர் ரொனிடிமெல் அடுத்தமாதம் 15 ஆம் திகதி ஐ தே. க. எம். பியாக மீண்டும் பதவி ஏற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. தேசியப்பட்டியல் உறுப்பினராக இவர் மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவாக ஐ. தே. க வட்டாரங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக ஜனாதிபதி பிரேமதாச காலத்திலும் இவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் நிதியமைச்சராகவும் பதவி ஏற்கவிருந்தார் என செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### சமாதான தீர்வு காணும் முயற்சியில்

## "குவேக்கர் பீஸ்" குழு நல்லெண்ணகுழு சந்திப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றை கண்டறிவதில் ஈடுபட்டுள்ள 'குவேக்கர் பீஸ்' அமைப்பின் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

இக் குழுவினர், அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுகொழும்பு திரும்பியுள்ள கத்தோலிக்க மதகுருமார்களை, கொழும்பில் சந்திக்கவுள்ளனர்.

## வல்வெட்டித்துறை கடற்பரப்பில் மீனவரைநோக்கி கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் இல மணி நேரம் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

மேற்குறித்த கடற்பரப்பில் நேற்றுக்காலை 4 மணியளவில் விசைப் படகில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமான முறையில் பீரங்கி, கலிபர் தாக்குதலை மேற்கொண்டதில் மீனவர்கள் கடலில் குதித்ததினால் காயம் எதுவும் இன்றி தப்பிக் கொண்டனர்.

இச் சம்பவத்தின்போது அச்சமடைந்த மீனவர்கள் தமது தொழில் உடைமைகளை கடலில் கைவிட்ட நிலையில் நீந்திக் கரைக்கு வந்தனர். கடற்படையினரின் தாக்குதல்கள் ஓய்வடைந்து கடற்படையினர் அப்பகுதியை விட்டுச் சென்ற பின்னர் மீனவர்கள் கடலுக்குச் சென்று உடைமைகளை மீட்டு வந்தனர்.

இதேவேளை கடற்படையினர் அப்பகுதிக் கரையோரக் குடியிருப்புகள் மீதும் கலிபர் தாக்குதலை மேற்கொண்டதில் சில ஆதிகோவிலடி கரைப்பகுதிகளில் விழுந்து வெடித்ததாக எமது வடமராட்சி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(யோ)

## 12 சிப்பாய்கள் படுகாயம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் கடந்த 21-ம் திகதி நடாத்திய தாக்குதலில் படுகாயமடைந்த 12 இராணுவத்தினர் சிகிச்சை பெற்றுவருவதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவிக்கிறது.

இத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானதுடன் ஆயுதங்களும் மீட்கப்பட்டமை தெரிந்ததே.

## விமானப்படை தளபதியின் அறிவிப்பிற்கு முரணானது

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே விமானப்படை தாக்குதல் நடத்தும் என புதிய விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க கடந்த

### பி.பி.ஸி விமர்சனம்

வாரத்தில் தெரிவித்ததற்கு பின்னர் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட முதல் விமானத்தாக்குதலாக நேற்று முன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பேட்டு கோழிக்குஞ்சு விற்பனைக்கு

லைலன் பிறவுண் 40 நாள், 12நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;- கோழிப்பண்ணை பலாலி வீதி, திருநெல்வேலி. (சி-8720)

### அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை

அகில உலக ரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர். அவரது நாடகங்களை பலவானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. பலர் நடிக்கின்றனர். 1. 'செட்டிக்காரர்கள்' 2. 'முதலாம்பிள்ளை' 30|- (7604)

### விரைவில் பாலர் ஆசிரியராக...!

தகைமை ஜி. ஸி. ஈ (O/L) சனி, ஞாயிறு பயிற்சி வகுப்பு நேரில் வரமுடியாதோர். தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் ஆரம்பம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7631)

### தவறிவிட்டது

26-2-94 அன்று லீலாவதி என்பவருடைய சூட்கேசும் கைப்பாக்கும் கிளாலி பற்றுச்சீட்டுக் கொடுக்கும் இடத்தில் தவறிவிட்டது. அவற்றுள் பாஸ்போட் உட்பட பல பொருட்களும் மருந்து வகைகளும் தவறிவிட்...

# பேச்சுவார்த்தைகளால் யுத்தம் முடிவுக்கு வராது

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்கள, முஸ்லிம் மக்கள் பெரும்பாலானோர் இன்று அகதி முகாம்களில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் முன்னர் 24 ஆயிரம் சிங்களவர் இருந்தனர். ஆனால் இன்று அங்கு ஒருவர் கூட இல்லை

இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சிறி சந்தானந்ததேரோ விமானப்படையின் புதிய தளபதியாக பதவி ஏற்றுள்ள ஏயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்காவை ஆசீர்வதித்துப் பேசுகையில் குறிப்பிட்டார் அவர் தொடர்ந்து பேசும்போது,

இலங்கையில் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் கற்கும் நிலையில்லை.

ஈழம் கேட்பவர்கள் வடக்கில் சிறு பிரிவினரே தமிழ் மக்களின் கோரிக்கைகள் பல வழங்கப்பட்டுள்ளன. என்றாலும் இந்த யுத்தம் முடிவிற்கு வருவதாகத் தெரியவில்லை.

இந்த யுத்தத்தை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முடியாது என்பதை கடந்த கால அனுபவங்கள் உணர்த்துகின்றன இதனால் பேச்சுவார்த்தை பிரயோசனமில்லை என்பது தெளிவாகிறது. பேச்சு வார்த்தை அவசியமாயின் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்றார்.

# அறவழிப் பயிலகம் திறந்து வைப்பு

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக்குழுவின் 16வது சேவை ஆண்டினை முன்னிட்டு ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அறவழிப் பயிலகம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை 25ம் திகதி சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

அறவழிப் போராட்டக் குழு தலைவர் திரு. ஜி. தங்கவேலு தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் அறவழிப் பயிலகத்தினை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு. ஜோன்குட்காண்ட் அவர்கள் திறந்து வைத்து உரைநிகழ்த்தினார்.

அவர் உரைநிகழ்த்துகையில், பல்வேறு நாடுகளில் அபிவிருத்தி தோல்வி அடைந்தற்கு காரணம் அங்கு மக்களுடைய வலிமையை பயன்படுத்தாமையே; குறிப்பாக அங்கு பொருளாதாரங்கள் கவனிக்கப்பட்டதே தவிர மக்களின் பங்களிப்பு கவனிக்கப்படவில்லை யாழ். மாவட்டத்தில் மனிதவலுவே பிரதானமுந்து சக்தியாக இருக்கின்றது. பயிற்சியின் பெருமையை இயல்பாகவே நான் ஏற்கின்றேன். நல்ல பயிற்சி மூலம் அபிவிருத்தியை மேற்கொள்ளலாம். இந்தப் பயிற்சி பயிற்சியாளருடைய வலுவைவெளிக்கொணர்வதாகவே அமைகின்றது என்று தமிழில் நன்கு தெரிவித்து உரையை நிறைவு செய்தார். இவரைத் தொடர்ந்து தென்மராட்சி பிரதேச செயலகர் திரு. பு. சுந்தரம்பிள்ளை த.ஈ.வி.பு அரசியல் துறையைச் சேர்ந்த கலைவாணன் அவர்களும் சாவகச்சேரி நகராட்சி மன்ற விசேட ஆணையாளர் திரு. த. நவரட்ணராசா அவர்களும், சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் திரு டாக்டர் ரி. சிவபாதம் (ரி. ஆர். ஆர் ஓ) உபதலைவர் திரு, அ. நல்லதம்பி ஆகியோர் உரைநிகழ்த்தினர்,

ஆசிரியர் என், கே, துரைசிங்கம் அவர்களின் காலாண்டு - செய்திக் கதிர் பெப்ரவரி 1994 இதழும் வெளியிடப்பட்டது. (86)

## தனக்குத்தானே தீமூட்டியவர்

(வடமராட்சி)

எரிகாயங்களுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சனி மாலை 5 மணியளவில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டார்.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறையடுத்து குடிசையில் தனிமையில் இருந்த பெண்மணி தன் உடலில் எண்ணெயை ஊற்றி தீவைத்தார்.

பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாய் திருமதி இரத்தினேஸ்வரி சிவானந்தன் (வயது 45) என்பவரே இவ்வாறு தீக்காயங்களுக்கு இலக்கானார். இவரது குடிசையும் உடைமைகளும் எரிந்து சாம்பராகியது (யோ)

## குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

செப்றிசிமியாவிற்கு உள்ளான குழந்தை ஒன்று யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட சமயம் மரணமானது

ரா- ஜெகதீசன் என்ற இந்த 3 மாதக் குழந்தை கொட்டடிப் பகுதியைச் சேர்ந்தது-

## புலிகளின் பாதுகாப்பு பகுதியில்

# நிவாரணத் தொகை வழங்கத் தடை

(கொழும்பு)

வடக்கிலிருந்து தென்னிந்தியா சென்று தற்போது அங்குள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள அகதிகளில் தாயகம் திரும்ப விரும்பும் அகதிகளின் விபரங்கள் மீண்டும் திரட்டப்படுவதாக,ரேப்பியா ஆணையாளர் திலக்சந்திர சேகர தெரிவித்தார்.

இதேவேளை தாயகம் திரும்பிய அகதிகளில் புலிகளின் ...டிற்குள் உள்ள பகுதியில் மீளக்குடியேறிவருபவர்களுக்கு 1000 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

## சைக்கிள் விபத்து வயோதிபர் பலி

மானிப்பாய் கட்டுடைப் பகுதியின் வீதியில் எதிர் எதிராக வந்த இரு சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோ...

## மன்னாரில் மூன்று கிளைகளுடன் அதிசய தென்னை மரம்

மூன்று கிளைகளுடன் காய்த்துக் குலுங்கும் தென்னை மரமொன்றை மன்னாரில் புனித செபத்தியார் ஆலயத்திற்கு அருகிலுள்ள எம். ஸ்ரீபனின் வீட்டில் காணப்படுகிறது. இத்தென்னை மரம் ஆறு வருடங்களுக்கு முன்னர் நாட்டப்பட்டது இந்தியாவுக்கு அகதிகளாகச்சென்றிருந்த இக்குடும்பத்தினர் அண்மையில் மீண்டும் வீட்டிற்குத் திரும்பியபோது இரண்டு கிளைகள் விட்டு காய்த்துக் குலுங்குவதைக் கண்டனர். இத்தென்னை மரம் இப்போது மூன்றாவது கிளையையும் விட்டு காய்த்து குலுங்குகிறது.

# பெண் வேட்பாளர்கள் பலவந்தமாக அழைப்பு

(மட்டக்களப்பு)

பாதுகாப்பு கருதி கொழும்பு வந்த ரெட்பானா பெண் ஊழியர்கள் மூவரும் படையினரால் மீண்டும் மட்டக்களப்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதே சமயம் ரெட்பானா கொழும்பு அலுவலகத்தில் இருந்த ஊழியர்களும் புலனாய்வுத்துறையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக்கருதி கொழும்பு வந்த இந்த மூன்று பெண்களும் கிழக்கில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களாவர். ''நான் பலாத்காரமாக மட்டக்களப்பு உயர் நீதிமன்றக் கட்டடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு மூன்று படிவங்களில் என் கையொப்பம் பெறப்பட்டது. நான் எதற்காக கையொப்பம் இடுகிறேன் என்பதுபற்றி எனக்கு கூறப்படவில்லை. நான் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தெரியாது. பத்திரிகை செய்திகள் மூலமாகவே அறிந்தேன் என ஒரு பெண் ரெட்பானா அதிகாரிகளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய இரு பெண் வேட்பாளர்களும் தாம் பலவந்தமாகவே தேர்தலில் போட்டியிட வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதுதொடர்பாக அவர்கள் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் எழுதியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## நினைவு கூருகின்றோம்..

### 1994. 02. 28

1986-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு சித்தாண்டிப்பகுதியில் மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

திருமலை - மூதூர், கட்டைபறிச்சான் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரால் . சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1987-ம் ஆண்டு மட்டு - களுதாவளைப்பகுதியிற் ... தமிழ் வீரச்சா...

ந்து வகைகளும் தவறிவிட்டன தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்: க. லீலாவதி 17 | 18, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (7630)

## விற்பனைக்குண்டு

ஒருமாத பிறவுன் பேட்டுக் கோழிக்குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப்பண்ணை, ஓராம் கட்டை, பிரதான வீதி, பருத்தித்துறை. (7614)

## வைத்திய சோதனை

(தொல்புரம்)

சுழிபுரம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவினால் பாடசாலை மாணவ, மாணவியருக்கான வைத்திய பரிசோதனைகள்பாடசாலைகள் தோறும் நடாத்தப்படுகின்றன.

போஷாக்கு, பல், காது சம்பந்தமாக அண்மையில் தொல்புரம் அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை நடாத்தப்பட்டு, போஷாக்கு குறைவான மாணவர்க்கு உயிர்ச்சத்து வில்லைகளும், பல், காது போன்றவற்றில் பாதிக்கப்பட்ட மாணவர்க்கு வைத்திய ஆலோசனையும் வழங்கப்பட்டது. இந் நிகழ்வின் போது சுழிபுரம் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி திரு. இராசநாயகம், தொல்புரம் பாணாவெட்டி அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி செல்வி ஈ. கந்தையா மற்றும் குடும்ப நல சேவையாளர்கள் கலந்து கொண்டு வைத்திய பரிசோதனையை நடாத்தி பல், காது சம்பந்தப்பட்ட நோயாளர்களை சங்கானை அரசினர் வைத்தியசாலையிலும், தொல்புரம் பாணாவெட்டி வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற ஆலோசனையும் அனுமதியும்வழங்கப்பட்டன. பல வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இச் சிறப்புப் பணியினால் அதிக பயனடைந்துள்ளனர். (41)

## விவாகப் பதிவாளர் நியமனம்

அளவெட்டி கிராம அலுவலராக இருந்து இளைப்பாறிய திரு. குழந்தைவேலு கந்தசாமி அவர்கள் வலிகாமம் வடக்கு பிரிவிற்கு விவாகப் பதிவாளராக 15-1-1994 தொடக்கம் மாவட்டப் பதிவாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கிரனைட்டுடன் ஆசிரியர் கைது

(மட்டக்களப்பு)

கல்முனைப்பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் கிரனைற்றுடன் கைது செய்யப்பட்டார்.

எம். ஏ. கி. ஏ. ஜபார் என்ற பாடசாலை ஆசிரியரான இவர் கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வெற்றிக்காக பிரசார வேலைகளில் ஈடுபட்டு வந்தார்.

## வடமராட்சி கம்பன் கழகம் கம்பன் விழாவுக்கு ஏற்பாடு

வடமராட்சிக்கம்பன்கழகத்தினர் நடாத்தும் கம்பன்விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையில் நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நிகழ்வதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. இவ் விழாவில் பட்டி மண்டபம், சுழலும் சொற்போர், விவாத அரங்கு, படைத்தவனை சந்திக்கும் பாத்திரங்கள், ஐயம் தெளி அரங்கு, கவியரங்கம், வழக்காடு மன்றம் போன்ற பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை தாயகம் திரும்பிய அகதிகளில் புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள மன்னார் பகுதியில் மீண்டும் குடியேற விரும்பும் அகதிகளுக்கு மீள் குடியேற்ற நிவாரணத் தொகை வழங்கவேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிற்கு பணித்துள்ளது. புலிகளின் கட்டுப்பாட் ...

... ராக வந்த இரு சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதால் கீழ விழுந்த வயோதியர் தலையில் காயமடைந்த நிலையில் ஸ்தலத்தில் பலியானார்.

மானிப்பாய் சண்டிலிப்பாய் பிரதான வீதி கட்டுடையில் இடம்பெற்ற இவ் விபத்தில் மாகியப்பிட்டியைச் சேர்ந்த தாமு அற்புதசீலன் (வயது 60) என்ற வயோதிபரே பலியானவராவார்.

## தேவை

நில விரிப்புகள் (Floor Carpets )இயற்கை காட்சிகளுடனான சுவர் ஓவியங்கள் (Wall Papers) என்பன தேவைப்படுகின்றன- விலைவிபரங்களுடன் கடிதம் மூலம் 15-03-94க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல:- 314
மே/பா ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

(7632)

## 31-ம் நாள் நினைவலைகள்

28.2.94



பிறப்பு
10.7.1979

இறப்பு
28.1.1994

## செல்வி கமலாதேவி (மணி)

வரணி சேர் குடமியன் ஊரிலே
சீரான எம் குடும்பமதில் வந்து பிறந்து
பக்குவமாக பள்ளி சேர்ந்து
ஊக்கமதாய் படிக்குங்கால்
இரத்தக் கான்சர் நோயினால் வருந்தி- யாழ்
வைத்தியசாலையில் மூன்று மாதம்
சிகிச்சை பெற்றும் மாறாநோயினால்
மரணமெய்தினாய்! மறப்போமா?

செல்வி கமலாதேவி (மணி)யின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமதுநன்றி.

28-02-94 (இன்று) எமதில்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடமியன்,
வரணி.

நா. கிட்டினன்,
குடும்பத்தினர்.

(7633)

## 1-ம் ஆண்டு நினைவுநாள்



பிறப்பு
05.4.1968

இறப்பு
11.3.1993

திருமதி
### அமிர்தலட்சுமி சந்திரதாஸ்
(தங்கக்கிளி - இன்பருட்டி)

திதி: 28.02.1994

ஓராண்டு காலம் உருண்டு போனாலும் அம்மா உன்
நீங்காத நினைவலைகள் இதயத்தில் நிலைத்திருக்க
பாங்காக வந்ததம்மா உன்நினைவுநாள் இன்று
தாங்காத வேதனையோடு துவண்டு விட்டோம் நாம்.
அம்மா உன் வண்ணமுகம் பாராத
எம் கண்கள் கண்ணீர் சொரியுதம்மா

அம்மா உன் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைபதம் வேண்டி நிற்கும்,

கணவன், பிள்ளைகள்

அல்வாய் வடக்கு

(7634)

... சிறிலங்கா இராணுவத்தினருடனான ... பட்ட 03 தமிழர்கள்.

1987-ம் ஆண்டு மட்டு - களுதாவளைப்பகுதியிற் தேசவிரோதக்குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.கௌதமன்** (வேலாப்போடி திருச்செல்வம்)
**கருணைநாயகம்** (அம்பிளாந்துறை-மட்டு)

யாழ்-கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மோகன்** (சுப்பையா பாலமோகன்-சந்திரபுரம்-மட்டுவில்வடக்கு -யாழ்)
**நெல்சன்** (கணபதிப்பிள்ளை - பாலகுமார் - பாலகுமார்வீதி, சிறுவிளான்-இளவாலை-யாழ்)
**கில்பேட்/கிட்லர்** (கந்தசாமி நடராஜா-கருங்காலி, காரைநகர்-யாழ்)
**தேவானந்** (வேலும்மயிலும் கேதீஸ்வரன்-கேணிப்புலம் ஒழுங்கை, மயிலிட்டி-யாழ்)
**சிவசிறி** (செந்தூரபாண்டியன் ஹரிகரமூர்த்தி- 6-ம் வட்டாரம், புங்குடுதீவு-யாழ்)

1991-ம் ஆண்டு யாழ்-காங்கேசன்துறைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து யாழ் போதனா வைத்தியசாலையில் வீரச்சாவெய்திய,

**லெப்.கபில்/வீரபாண்டியன்** (இராசரத்தினம் இராஜபாண்டியன்-கொழும்புத்துறைவீதி-பாண்டியன் தாழ்வு-யாழ்)

1992-ம் ஆண்டு மட்டு - பெண்டுகள் சேனைப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**இருதயன்** (கி. தர்மலிங்கம் - கித்தாண்டி-மட்டு)

காங்கேசன்துறை கடற்படை முகாமிலிருந்து வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு 'சவட்டின்' ரோந்துப்படகில் சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழக் கடற்பரப்பில் (தாளையடி) வைத்து வழிமடக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஏற்பட்ட கடுஞ்சமரில் வீரச்சாவெய்திய.

கடற்புலிகள்,

**லெப்.சஞ்சீவன்** (வைரமுத்து ஜெயேந்திரன்-மாங்கேணி,வாழைச்சேனை-மட்டு)
**கப்டன் தமிழரசன்-சியாப்** (பரமகுரு உதயகுமார்-ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை-யாழ்)
**2-ம் லெப்.சிவலோகநாதன்-லோகன்** (வேலாயுதபிள்ளை விக்னேஸ்வரன்-தாளையடி-யாழ்)
**2-ம்லெப்.ஆனந்தன்** (அழகன் அண்ணாத்துரை-புனிதநகர்,கற்கோவளம்-காரைநகர்)

யாழ்-கோட்டைப்பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் சாவடைந்த,

**மயிலினி** (ஜீவராணி சின்னத்தம்பி-சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி-யாழ்)

1993-ம் ஆண்டு அம்பாறை-தங்கபுரம் பகுதியிற் சிறிலங்காச்சிறப்பு அதிரடிப்படையினருடனான நேரடிச்சமரில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய அம்பாறை மாவட்ட விசேடதளபதி

**மேஜர் சசிரூபன்-சசி** (மாணிக்கம் சிவபாலராசா மத்தியமுகாம் கல்முனை அம்பாறை)

மன்னார்-கள்ளியடி கிராமத்தில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானக்குண்டுவீச்சில் பலியான 05 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8721)

கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம்

# வடக்கிற்கு பொருள் அனுப்ப வவுனியாவில் களஞ்சியம் அமைப்பு

(வவுனியா)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கட்டுப்பாட்டு விலைக்கு தங்கு தடையின்றி பெற்றுக்கொள்வதை உறுதி செய்யும் நோக்குடன் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் வவுனியாவில் மார்ச் மாதம் பெரிய களஞ்சியம் ஒன்றை அமைக்கவிருக்கிறது.

மூன்று மாவட்டங்களுக்குத் தேவையான பொருட்கள், இக் களஞ்சியத்திலிருந்தே தனியார் வியாபாரிகளுக்கும் கூட்டுறவுக் கடைகளுக்கும் விநியோகிக்கப்படும்.

வடபகுதி மக்களுக்குத் தேவையான அனுமதிக்கப்பட்ட பொருட்கள், தனியார் வியாபாரிகள் கொழும்பிற்கு வந்து கொள்வனவு செய்து கொண்டு போகும்போது சோதனை என்ற பெயரில் எதிர்நோக்கும் கால விரயங்கள் மற்றும் சிரமங்களைத் தடுக்கும் நோக்கில் வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் உத்தரவின் பேரில் இப்புதிய ஏற்பாட்டை கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் செய்யவிருக்கிறது.

வவுனியாவில் அமையவிருக்கும் கூட்டுறவு மொத்த களஞ்சியத்தில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு லொறிகளில் ஏற்றப்படும் போதே சோதனைகளும் மேற்கொள்ளப்படும் வவுனியாவிலிருந்து வடபகுதிக்கான பாதையில் வேறெந்த இடங்களிலும் இந்த லொறிகள்மீது பாரிய சோதனை மேற்கொள்ளப்படமாட்டாது.

கூட்டுறவு மொத்த விற்பனை தலைமைக் காரியாலயத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அதன் தலைவர் இதனை அறிவித்தார். மேலும் அங்கு தெரிவிக்கப்பட்டதாவது, இவ்வளவுகாலமும் பெரும்பாலான உணவுப் பொருட்கள் தனியார் வியாபாரிகளினால் லொறிகள் மூலம் யாழ்ப்பாணத்திற்கும் வடக்கில் உள்ள ஏனைய மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன.

கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் இந்த லொறிகள் அனுராதபுரத்திற்கும் வவுனியாவுக்குமிடையில் நான்கு இடங்களில் இராணுவத்தால் சோதனையிடப்படுகின்றன.

ஈரற்பெரியகுளத்தில் லொறிகளில் உள்ள பொருள்கள் இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன. இதனால் இராணுவத்திற்கு ஒரு நாளைக்கு 25 லொறிகளை மட்டுமே வடக்கு நோக்கி செல்ல அனுமதிக்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு லொறி ஈரற்பெரிய குளத்தில் உள்ள இந்தத்தடையைத் தாண்டிச் செல்ல 30 நாட்கள் எடுகின்றது.

வவுனியாவில் அமையவிருக்கும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தில் இனி இந்த லொறிகள் பொருட்களை ஏற்றிக்கொண்டு வடபகுதிக்குத் திரும்பலாம்.

வவுனியாவில் குறிப்பிட்ட நிலையத்தில் நியாயவிலைக்கு

சித்திர பாடப் பரீட்சை

## தவறான நேர அட்டவணை பல மாணவர்கள் பாதிப்பு

வட இலங்கை நுண்கலை மன்றம் நடத்திய சித்திர பாடத்திற்கான பரீட்சைக்காக விநியோகிக்கப்பட்ட பரீட்சைநேர அட்டவணையில் திகதி மற்றும் கிழமைகளில் ஏற்பட்ட தவறு காரணமாக பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பரீட்சைக்கான நேர அட்டவணையில் பெப்ரவரி 25ம் திகதி சனிக்கிழமை எனவும், பெப்ரவரி 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனவும், பெப்ரவரி 27-ம் திகதி திங்கட்கிழமை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இத் திகதிகள் முறையே வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகள் ஆகும். இதனால் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதியையா அல்லது கிழமையையா கவனத்தில் எடுப்பது என்பது தெரியாமல் மாணவர்கள் பலரும் குழப்பமடைந்துள்ளனர்.

## விளையாட்டு வினையாகியது சிறுவன் காயமுற்றார்

(யாழ்ப்பாணம்)

சக்கரம்போன்ற பொருளை எடுத்து விளையாடியபோது அது வெடித்து சிறுவனின் கையில் காயமேற்பட்டது.

இச்சம்பவம் சிலதினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி வட்டக்கச்சி என்ற இடத்தில் நிகழ்ந்தது.

தங்கையா ஏசுகுமார் என்ற சிறுவன் (வயது10) சக்கரம் வடிவில் அமைந்த சிறிய பொருள் ஒன்றை எடுத்து அதில் ஆணி ஏற்றிப் பார்த்த போது அது வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கையில் காயமடைந்த சிறுவன் யாழ். வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

### பிறப்பு சான்று விண்ணப்பம் ஏற்பு

(தொல்புரம்)

பிறப்பு சான்றிதழ் வழங்குவதற்குரிய 1954 ஆம் ஆண்டுக்கு பின் பிறந்தவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் இல்லாத காரணத்தால் அண்மைக்காலமாக விண்ணப்பங்கள் ஏற்பதை இடைநிறுத்தியிருந்த யாழ் பிறப்புப் பதிவு அலுவலகத்தினர் கொழும்பிலிருந்து ருகுணு கப்பல் மூலம் மேற்குறித்த ஆண்டிற்கான சான்றிதழ் வழங்கும் புத்தகங்கள் உட்பட ஏனைய பிறவும் வந்து சேர்ந்ததை அடுத்து பிறப்பு சான்று விண்ணப்பங்கள் ஏற்கும் வேலைகள் கடந்த புதன் கிழமை முதல் ஆரம்பித்துள்ளனர் என தெரியவருகிறது.

(41)

### தையல் பயிற்சி அளிக்க நடவடிக்கை

(தொல்புரம்)

சுயவேலைவாய்ப்பு வசதியை மேம்படுத்துவதற்கும், தொழில் பயிற்சியை நல்ல முறையில் பெறுவதற்கும் வசதியாக நடப்பு ஆண்டில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஒவ்வொரு தையல் பயிற்சிநிலையம் அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி பயிற்சி நிலையங்களை நடத்துவதற்கு ஏதுவாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இலவசமாகப் பெறக்கூடிய பொருத்தமான கட்டடத்தை பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(41)

### போசாக்கு குழு அமைக்க நடவடிக்கை

யாழ் குடாநாட்டின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் போசாக்கு குழுக்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று கொள்கை திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சின் செயலாளரினால் யாழ் மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்

# எம் மண் வளங்களிலிருந்து உச்சப் பயன் வேண்டும்

## மன்னார் மாவட்ட தளபதி

நாம் இம்மண்ணில் உள்ள வளங்களை இனங்கண்டு அதிலிருந்து அபிவிருத்தியை, உச்சப் பயனை அடைய வேண்டும். இதற்காகவே தேசியத் தலைவரினால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்துடன் நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட முன்வரவேண்டும் என மன்னார் மாவட்டத்தளபதி திரு. ந. லக்ஸ்மன் அவர்கள் மன்னார் மாவட்டத்தில் பண்டிவிரிச்சான் அ. த. க. பாடசாலை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற விவசாயக்கருத்தரங்கில் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

இககருத்தரங்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வதிவிட வேளாண்மைப் போட்டியை மன்னார் மாவட்டத்தில் நடாத்துவதற்கான நடைமுறைகள், விவசாய மன்னர் தெரிவுப் போட்டி பற்றிய இறுதித் தேர்வு, கமக்காரர் அறிமுக அட்டை வழங்குவது ஆகியவை பற்றி கலந்துரையாடுவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இக்கருத்தரங்கிற்கு மன்னார் மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் தலைமை வகித்தார், மாவட்ட இணைப்பாளர், இக்கலந்துரையாடலின் அவசியம் பற்றி எடுத்து விளக்கினார்.

இக்கருத்தரங்கில் 93|94 காலபோக இலக்குகள் நிறைவேற்றப்படுவது பற்றியும் ஆராயப்பட்டது.

அரச அரசசார்பற்றநிறுவன பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், விவசாய போதனாசிரியர்கள், செயர் நிறுவன பிரதிநிதிகள் சிறுவர் பாதுகாப்பு பிரதிநிதிகள், பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வு கழகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் 125ற்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மிதிவண்டி உதிரிப்பாகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலைச் சங்கத்திற்கு பல லட்சம் ரூபா பெறுமதியான மிதி வண்டி உதிரிப் பாகங்கள் மிக விரைவில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளன.

யாழ் குடாநாட்டில் மிதிவண்டிகளின் பாவனை கணிசமான அளவு அதிகரித்துள்ளமையினால் அதற்கான உதிரிப் பாகங்களின் விலைச் அதிகரிப்பைக் குறைக்கும் நோக்குடன் மேற்படி முயற்சியில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்

சென்ற வருடம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரி யாழ்ப்பாணம் வந்த போது மேற்படி விடயம் தொடர்பாக வழங்கப்பட்ட உறுதிமொழியைத்தொடர்ந்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் மிக விரைவில் இவை யாழ். குடாநாட்டிற்கு வந்துசேரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது(நி).

## கல்வியும் விளையாட்டும் மாணவர்களுக்கு முக்கியம்

-நிர்வாக உத்தியோகத்தர்

(வடமராட்சி)

மாணவ சமுதாயங்கள் நாட்டின் விடிவெள்ளிகள். அவர்களது எதிர்காலம் கல்வியிலேயே தான் தங்கி நிற்கின்றது.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றவருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர் திரு. [illegible] ந்து ஆற்றிய உரையில் இன்று ஒரு நெருக்கடியான சூழலிலேயே மாணவர்கள் கல்வி கற்க வேண்டியுள்ளது. நாங்கள் கல்வி கற்ற காலத்திற்கும் தற்போதைய காலத்திற்கும் இடையில் கல்வி நிலையில் மாற்றங்கள் காணப்படுகின்றன. அன்று இருந்த அமைதி இன்று இல்லை. கல்வியில் ஆர்வம் உள்ளவர்களுக்கு அன்றைய காலநிலை துணையாக இருந்தது.

### பேடன் பவல் நினைவு அனுஷ்டிப்பு

(தொல்புரம்)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால் பேடன் பவல்தினமும் சிந்தனைநாளும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அண்மையில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மண்டபத்தில் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் சங்கானை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன்

# குப்பைகொளுத்தியசிறுவன் எரிகாயங்களுக்கு இலக்கு

(யாழ்ப்பாணம்)

குப்பை கொளுத்திக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் திடீரென அதற்குள் இருந்து சீறிவெளிவந்த வாயுவினால் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

கடந்த 24ஆம் திகதி இச் சம்பவம் நடந்துள்ளது வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்து பாவித்த காஸ் டப்பாவே இச்சம்பவத்திற்கு காரணமாகும்.

மேற்படி காஸ் டப்பா வீட்டுப் பாவனைக்கு பயன்படுத்தப்படும் சுத்திகரிப்பு பொருளாகும். இப்பொருள் பாவித்து தீர்ந்து போய்விட்டது என்பதனால் சிறுவனிடம் குப்பையில் போடும்படி கொடுக்கப்பட்டது. எரிந்து கொண்டிருந்த குப்பையினுள் அதைபோட்டுவிட்டு அருகில் சிறுவன் இருந்தபோது அதனுள் இருந்த காஸ் திடீரென வெளியேறி சிறுவனின் முகத்தை தாக்கியதாலேயே சிறுவன் எரிகாயங்களுக்குள்ளானதாக தெரியவருகின்றது.

(கி)


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### யாழ் மாவட்டம்

எதிர்வரும் புதன்கிழமை 2.3.1994 பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் மாவட்ட பொதுச்சபைக் கூட்டமும் பிற்பகல் 4.00 மணிக்கு யாழ் கோட்ட பொதுச்சபைக் கூட்டமும் எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். யாழ் கோட்ட நிர்வாக சபை தெரிவு நடைபெற இருப்பதால் சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்.
யாழ் மாவட்டம்.

(சி-8736)



மலிவு விற்பனை

புடைவை வகைகள், பீங்கான் வகைகள்
அன்பளிப்புகளிற்கு அன்பளிப்பு மடல்கள்
ரூபா 500-ற்கு மேற்பட்ட கொள்வனவுகளிற்கு
இலவச பரிசு சிட்டைகள்

## எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:
பெப்ரவரி மாதத்திற்கான சிட்டிழுப்பு
2-3-94 புதன்கிழமை இடம்பெறும்.

(சி-8723)


பொருட்கள் விநியோகம் செய்யப்படும். வேறு இடங்களில் சோதனைகள் இல்லை. இதனால் தாமதமும் இல்லை. இவற்றின் காரணமாக வட பகுதியில் பொருட்களுக்கான விலைகள் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பத்தில் சகல செயலர் பிரிவுகளிலும் போசாக்கு குழுக்களை அமைப்பதன் மூலம் யாழ் மாவட்டத்தில் போசாக்கு குறைபாட்டை தீர்க்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வே. வீரபத்திரப்பிள்ளை தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் திரு. சிற்றம்பலம் தலைமையில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

பிரதம விருந்தினர் தொடர்

# பரீட்சையில் சித்தி பெறுவதற்கு மட்டும் கல்வி உரியதல்ல

**- கல்விப் பணிப்பாளர்**

(வடமராட்சி)

கல்வி என்பது விசேட சித்தியைப் பெறுவதற்காக மட்டும் கற்பதல்ல. நல்ல ஒழுக்கம், ஆனந்தமான வாழ்வு, உபசரிப்பு இவற்றிற்கும் கல்வி முக்கியத்துவம் வகிக்கிறது. கல்வியில் உள்ள ஆர்வம் விளையாட்டிலும் வேண்டும். அப்போதுதான் பல வகையான ஆற்றல் கொண்ட சமூதாயமாக இருக்க முடியும். இவ்வாறு வட இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற உயர்தர வகுப்பு மாணவர்களின் இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், இன்றைய நிகழ்ச்சிகளை அணிவகுப்பின் ஆரம்பம் முதல் இறுதி விளையாட்டுக்கள் வரை பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் சுவையானவை அணிநடை சிறப்பாக இருந்தது. நல்ல பயிற்சியை பெற்று இருந்தது. இங்கே மாணவிகளின் விளையாட்டுத் திறமையை வெளிப்படுத்துவதற்கான மைதானத்தின் விஸ்தீரணம் போதாமல் இருக்கிறது. இதனை நிவர்த்தி செய்ய நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கே நான் பெற்ற அனுபவங்கள் மிகப் பெரிதானவை அத்துடன் அரிதானவை எனவும் தெரிவித்தார். போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களையும் பிரதம விருந்தினர் வழங்கினார். (யோ)

# மானிப்பாய் வீதியில் வீதி விளக்கு அமைப்பு

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதானமான மூன்று இடங்களில் வைபவ ரீதியாக வீதி விளக்குகள் ஏற்றப்பட்டன.

கடந்த 23-2-94 மாலை வேளை இடம்பெற்ற இவ் விளக்கேற்றல்வைபவம் மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்த தெல்லிப்பழை பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் முன்பாகவும் மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாகவும் ஆனைக்கோட்டை அரசடிச் சந்தி முன்பாகவும் முறையே தெல்லிப்பழை ப.நோ.கூ சங்கத் தலைவர் திரு. நா. தவநாதன், மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை, மானிப்பாய் லயன்ஸ் கழக தலைவர் திரு. எஸ். எஸ். தங்கராசா ஆகியோரினால் வீதி விளக்குகள் வைபவ ரீதியாக ஏற்றிவைக்கப்பட்டன (41)

## பொன் விழா

(வடமராட்சி)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 1994 ஆம் ஆண்டு பொன் விழாவைக் கொண்டாடவுள்ளது.

இக்கல்லூரி ஸ்தாபித்து இந்த வருடத்துடன் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்யவுள்ளதையிட்டு பொன் விழா கொண்டாடப்படவுள்ளது.

இக்கல்லூரியில் சுமார் 1500 மாணவிகளுடன் 51ஆசிரியர்கள் தற்போது பணிபுரிகின்றனர். (யோ)

கும்போது மாணவர்கள் கல்வியில் ஒரு வித்தியாசமான முறையில் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மாணவ சமுதாயத்தின் கல்விக் காலங்கள் சீரழிந்து போகக்கூடாது அவர்களின் எதிர்காலத்தில் தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. மாணவ மணிகள் நாட்டின் விடிவெள்ளிகள்.

மாணவர்கள் இந்த நாட்டின் குடிமக்களாக திகழ வேண்டும். மாணவ சமுதாயத்தை முன்னேற்ற இன்றைய சூழலில் கஷ்டங்கள் இருக்கின்ற போதிலும் நாங்கள் முகம் கொடுத்து மாணவர்களின் எதிர்காலத்தை நல்ல வளமாக்க முயலவேண்டும்.

இன்று ஒரு சாதாரண குடிமகன் தனது உயிரைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள முடியாத காலகட்ட நிலை உருவாகியிருக்கிறது. இந்த நிலையில் நின்று இன்றைய மாணவ சமுதாயத்தை நோக்க வேண்டும். எங்களது உள்ளத்துக்கு அறிவு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறதோ அதே போன்று விளையாட்டும் முக்கியத்துவம் அடைகிறது.

கல்வியும் விளையாட்டும் மாணவர்களுக்கு முக்கியமானது. வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வரும். தோல்வி அடைந்தவர்கள் தொடர்ந்தும் வெற்றிக்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மற்றும் பளை பிரதேச செயலாளர் திரு. ஐயாத்துரையும் உரை நிகழ்த்தினார். கல்லூரி விளையாட்டு ஆசிரியர் திரு. வல்லிபுரம் நன்றியுரை வழங்கினார். பிரதம விருந்தினர் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.

இல்ல விளையாட்டின் போது பாரதி இல்லம் முதலாம் இடத்தையும், கம்பன் இல்லம் இரண்டாம் இடத்தையும், வள்ளுவன் இல்லம் மூன்றாம் இடத்தையும். இளங்கோ இல்லம் நான்காம் இடத்தையும் முறையே பெற்றுக்கொண்டன. (யோ)

யோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் மேலும் கடந்தவாரம் இடம்பெற்ற குருளைச் சாரணர்களின் பாசறை நிகழ்வின்போது இடம்பெற்ற கோலாட்டம், நாடகம் போன்றவற்றில் கலந்து வெற்றியீட்டிய சாரணர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன நிகழ்வின் இறுதியில் சிறப்பு நிகழ்ச்சியாக கோலாட்டம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன, (41)

## தொலைக்கல்வி வகுப்புகள் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

தொலைக்கல்வி பயிற்சி நெறியின் இரண்டாம் வருட விசேட பயிற்சி வகுப்புகள் சுன்னாகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

## இன்றைய நிகழ்வுகள்

யாழ். இந்துக்கல்லூரி மைதானச்சந்திக்கு அருகிலுள்ளமெய்கண்ட தேவர் ஆதீன மண்டபத்தில் இன்று காலை ஒன்பது மணிமுதல் எறிபத்த நாயனார் குருபூசையும், மனவாசகங்கடந்தார் நினைவுப் பேருரையும் இடம்பெறவுள்ளன.

ஃ ஃ

ஸ்ரீ ராகவேந்திரா சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனத்தின் இசையாராதனை இன்று பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் இடம்பெறவுள்ளது.

ஃ ஃ

'மகவம்' இலக்கியச்சந்திப்பு தொடரின் 40ஆவது நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணியளவில் உரும்பராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் அமரத்துவம் அடைந்த ஈழத்து மூதறிஞர்களுக்கான அஞ்சலி தெரிவிக்கப்படவுள்ளதுடன், தமிழக கலை, இலக்கிய அனுபவங்கள் பற்றி கலாநிதி நா. சுப்பிரமணியனின் உரையும் இடம் பெறவுள்ளது.

அவசரகால சட்டத்தின் கீழ்

# தேர்தல் சட்டங்களை சமச்சீராக அமுல்படுத்த முடியாதுள்ளது

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

தேர்தல் காலங்களில் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது சமச்சீராக நடைமுறைப்படுத்த வேண்டும்; தனிமனிதர் தொகுதி, கட்சி, வேட்பாளர்கள் என்று வித்தியாசம் காட்டக்கூடாது. ஆனால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தனி மனிதரும், கட்சிகளும் பாரபட்சமாக நடத்தப்படுவதை எமது அனுபவத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. அவசரகாலச் சட்டம் என்ற போர்வையில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் அரசியல்வாதிகளும், வாக்காளர் நிலைய முகவர்களும் கைது செய்யப்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதற்கு நீதிமன்றத்திலும் நியாயம் கேட்க முடியாத நிலை உள்ளது.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா பெப்ரவரி சோஷல் ஜஸ்ரிஸ் (Social Justice) சஞ்சிகைக்கு வழங்கிய விசேஷ பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்திற்கு ஐந்து அல்லது ஆறுகிழமைகளுக்கு முன் இவர்கள் கைது செய்யப்படுவதால், குறுகிய காலத்தில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

கடந்த எட்டு வருடங்களுக்குமேல் துரதிர்ஷ்டமானஒரு சூழ்நிலை எமக்குத் தடையாக உருவாகி இருக்கிறது. இக்காலப்பகுதியில் நாம் அவசரகாலச் சட்டம் அல்லது அதுபோன்ற ஒரு சட்டத்தின் கீழ் வாழ்ந்து வருகிறோம். அவசரகாலச் சட்டத்தை உண்மையாக செயற்படுத்தும்போது நாட்டின் சாதாரணச் சட்டங்கள் மாற்றத்துக்கு உள்ளாகின்றன. குறித்த காரியத்திற்காக பயன்படுத்தும் வகையில், அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டின் சாதாரண சட்டங்கள் சிலர் வசமாகின்றன. இவ்வகையான நிலையில் தேர்தல் சட்டங்களை சமச்சீராகச் செயற்படுத்த முடியாது என்று கூறியுள்ளார்.

# தங்குமிடவசதிகொடுத்ததாக குற்றப்பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் இளைஞர்களுக்கு தங்குமிட வசதி வழங்கிய குற்றத்திற்காக தமிழர் ஒருவர் மீது கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த ஐந்து தமிழ் வாலிபர்களுக்கு தங்குமிடம் வழங்கியமைக்காக கொழும்பு செட்டித்தெருவைச் சேர்ந்த சண்முகராஜா பேரானந்தம் என்பவர் மீது இவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுளளது.

இவர் தங்குமிடவசதி செய்து கொடுத்த ஐந்து வாலிபர்களும் பொலிசாரால் தேடப்படுவோர் எனத் தெரிந்திருந்தும் இவர்களுக்கு அத்தகைய வசதியை இவர் செய்து கொடுத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (நி)

# சமாதானசூழல்ஏற்படுவதே நாட்டுக்கு முக்கியமானது

## - ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(கொழும்பு)

போர் ஓய்ந்து விரைவில் ஒரு சமாதான சூழல் ஏற்பட வேண்டுமென்பதையே வடபகுதி மக்களும் இன்று விரும்புகின்றனர். இவ்வாறு

கொழும்பிலிருந்து வெளியாகும் 'திவயின' பத்திரிகைக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடக்கும் யுத்தம் விரைவில்

### நேர்முகப்பரீட்சை

யாழ். மாநகரசபை தற்காலிக சுகாதாரத் தொழிலாளர் பதவி நேர்முகப்பரீட்சைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை 67 பேர் பங்கு பற்றினர்.

### சைக்கிள் விபத்து

இரவு வேளையில் இரு சைக்கிள்கள் மோதிக்கொண்ட சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்,

கச்சாய்வீதி சாவகச்சேரியை சேர்ந்த அ. இரத்தினம் என்பவரே இச் சம்பவத்தில் காயமடைந்தவராவார் தலையில் படுகாயமடைந்த இவர் சாவகச்சேரி மருத்துவமனை

# றெட்பானா அதிகாரிகள் பிணையில் விடுதலை

கிழக்கு மாகாண வேட்பாளர்களை கடத்திச்சென்றனர் என கூறப்படும் இருவர் நீதிமன்றத்தினால் 50,000 ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

''றெட்பானா'' நிறுவனத்தின் பணிப்பாளரான ஏ.பி. எஸ். பாலச்சந்திரனும், அந்த நிறுவன சட்டதரணி எஸ். தியாகராஜாவும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரி தாக்குதல் பற்றிய

# இரா. விசாரணை அறிக்கை பாராளுமன்றத்திற்கு வராது

## அமைச்சர் விமல் விக்கிரமசிங்க

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் பூநகரியில் இருந்த இறிலங்கா படைகளின் கூட்டுமுகாம் மீது நடத்திய தாக்குதல் தொடர்பாக இராணுவ அதிகாரிகளால் நடத்தப்பட்ட விசாரணைகள் பற்றிய அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படமாட்டாது. இவ்வாறு சுற்றாடல், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான நிமால் சிறிபாலடி சில்வாவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மேலும் கூறுகையில், இத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் வெளியிடப்படாமைக்கு பாதுகாப்பு பற்றிய அம்சங்களே காரணமாகும் எனவும் தெரிவித்தார். இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துவது விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டார். எனினும் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ணாவின் செய்கைகளுக்கும் இந்த அறிக்கைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனத் தெரிவித்தார்.

இருந்தபோதும் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால் அரசு சங்கடத்திற்குள்ளாக நேரிடும் என்பதாலேயே அரசு தவிர்ப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

# மரநடுகை போட்டியில் பரிசுக்குரியோர் தெரிவு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மாணவர், பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் மரநடுகைப் போட்டித்திட்டத்தின் ஓராண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு, இறுதி மதிப்பீடுசெய்கையில் யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டியில் முதலாமிடத்தை யாழ். இந்துக்கல்லூரியும், மாணவர்களுக்கான போட்டியில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி உதவியில்லாத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணக் கோட்டத்தில் மட்டும் 10 மாணவர்கள் பங்குபற்றினார்கள். இவர்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான சோ. செந்தூரன், நா. தர்சன், சோ. ராஜ்தணிகைச்செல்வன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும், இம் மரநடுகைப் போட்டித்திட்டத்தில் ஒவ்

# பால்மா விலை அதிகரிப்பும் சத்துக்குறைவிற்கு காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்குத் தனியாரினால் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பால்மாக்கள் உச்ச விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் சாதாரண பொதுமக்கள் அதனை நுகர முடியாத அளவில் விலைகள் அமைந்திருப்பதாகவும் பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த விலை அதிகரிப்பினால் தற்போது யாழ். குடாநாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் மந்த போஷாக்குக்கு முக்கிய காரணம் எனவும், குறிப்பாக குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் பருமனுக்கும் இதுவே காரணம் எனவும், இதனால் குழந்தைகளின் ஆரோக்கியம் வெகுவாக குன்றியுள்ளதாகவும் வைத்திய வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

(நி)

எழுதுநர், தட்டெழுத்தாளர்

# நேர்முகப்பரீட்சைக்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அரசசேவை எழுதுநர், தட்டெழுத்தாளர் சேவைகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக 1993 இல் நடாத்தப்பட்ட பொதுப் போட்டிப் பரீட்சை தொடர்பாக எதிர்வரும் மார்ச் 12 ஆம் திகதி செயலகத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

செல்வி ஜே: நமசிவாயம் கொக்குவில், செல்வி ஆர். ஞானகலா மானிப்பாய், செல்வி எஸ். பாலகிருஷ்ணன் பருத்தித்துறை, செல்வி எஸ். அமலஜெயராணி மயிலிட்டி, செல்வி பி. வேலுப்பிள்ளை பருத்தித்துறை செல்வி வி. இராஜசங்கரி சாவகச்சேரி, செல்வி ஜே இராஜேஸ்வரன் அல்வாய், செல்வி எம் யசோதா உரும்பராய், செல்வி ஜே. வரப்பிரகாசம் கொட்டடி, செல்வி ஆர். சிவதேவி தெல்லிப்பழை, செல்வி வி. இரத்தினம் மல்லாகம் செல்வி எஸ் ரோகினி நல்லூர் செல்வி கே ஜே ரேணுகாதேவி யாழ்ப்பாணம், செல்வி எஸ். சதியராணி உரும்பராய், ஆர் கேசவன் கரவெட்டி, கே பி கௌரியம்பாள் காரைநகர், ஆர். இரட்ணவதி யாழ்ப்பாணம், செல்வி பி கமலகுமாரி சுழிபுரம், செல்வி பி ஜெயதேவி காரைநகர்;

செல்வி ஜே மங்களவதனி சுன்னாகம், செல்வி பி கோமதி தெல்லிப்பளை, செல்வி எஸ் ஆனந்தி புங்குடுதீவு, செல்விரி உதயராணி உரும்பராய் கே ஏ நிசாந்தன் கரவெட்டி செல்வி ஆர் விஜயமாலா வட்டுக்கோட்டை, செல்வி என் பத்மினி காரைநகர், எஸ் இந்திரகுமார் மாதகல், கே சிவதாஸ் பருத்தித்துறை, எம் ரமணிக்கா யாழ்ப்பாணம் செல்வி என் விமலாம்பிகை யாழ்ப்பாணம், செல்வி கே மதிவதனி மண்டைதீவு, செல்வி வி மாதவி காரைநகர் கே. நடராசா தெல்லிப்பழை செல்வி ஆர் மதிவதனி திருநெல்வேலி, செல்வி பி மஞ்சுளா நீராவியடி, செல்வி என் மதுமதி இளவாலை. செல்வி ஆர் வானதி கரவெட்டி, செல்வி என் தயாளினி கந்தர்மடம் எஸ் சற்குணராசா காரைநகர் பி தயாளினி சுன்னாகம்.

விரும்புகின்றனர். இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நடக்கும் யுத்தம் விரைவில் ஓய்வுக்கு வர வேண்டும். இதுவே இன்று நாட்டுக்கு முக்கியமானது எனவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம்மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (86)

# சமாதானம் வேண்டுமெனில் வாக்களிப்பில் கலந்து கொள்ளுங்கள்

## கிழக்கு மக்களுக்கு பிரதமர் மிரட்டல்

(கொழும்பு)

சமாதானம் வேண்டுமானால் கிழக்கு மாகாண மக்கள் முழுமையான அளவில் வாக்களிப்பில் கலந்து கொள்ளல் வேண்டும். இவ்வாறு சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; வாக்களிப்பில் கலந்து கொள்ளாதவர்கள் சமாதானத்தை விரும்பாதவர்கள் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிப்பில் ஈடுபடாமல் அதனைப் புறக்கணிப்பு செய்யும்படி சில ஜனநாயகவாதிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்: இத்தகைய கோரிக்கைகளை விடுப்பவர்களை ஜனநாயக விரோதிகள் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

எனவே கிழக்கு மாகாண மக்கள்சமாதானத்தை விரும்புவது உண்மையானால் முழுமையான அளவில் வாக்களிப்பில் கலந்து கொள்ளல் வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பௌத்த பிக்குகளுக்கு புதிய அடையாள அட்டை

(கொழும்பு)

பௌத்த பிக்குகளுக்கு புதிய அடையாள அட்டை வழங்குவதற்கு பௌத்தகலாசார அமைச்சு முடிவு செய்துள்ளது

தேசிய அடையாளஅட்டையுடன் கூடிய இவ் அடையாள அட்டையானது பௌத்த பிக்குகளை எளிதில் அடையாளம் காணக்கூடிய விதத்தில் உதவுமென்றும் தென்னிலங்கை கிளர்ச்சியாளர் சிலர் பௌத்த பிக்குகள் வேடத்தில் திரிவதினால் இவர்களை அடையாளப்படுத்தவும், இதனால் ஏனைய பௌத்த பிக்குகளுக்கும் ஏற்படும் அசௌகரியத்தைதவிர்க்கும் நோக்குடனும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பகிரங்க ஏலம்

(வடமராட்சி)

பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் இரண்டு குவியல் விறகுகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார்.

அதற்கான பணத்தை அன்று உடனடியாக மன்றில் செலுத்தி 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(யோ)

## இரவுநேர படிப்புக்கு வெளிச்ச வசதி

யாழ் சிறீலங்கா வித்தியாலய மண்டபத்திலும், தும்பளை தெற்கு திருவள்ளுவர் ச. ச. நிலைய மண்டபத்திலும் நடைபெறும் இரவுநேர சுய மீட்டல் வகுப்புகளுக்கான வெளிச்ச வசதிகளை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் பருத்தித்துறை கல்விக் கோட்டப் பிரிவினர் செய்து கொடுத்துள்ளனர்.

# சட்டபூர்வ செயலை விட அனுபவமே சிறந்தது

## தொண்டமான்

(கொழும்பு)

இழந்த உரிமைகளைப் பெறுவதில் சட்டபூர்வ நடவடிக்கைகளை விடவும், அனுபவ ரீதியான அணுகுமுறைகளே வெற்றி தந்துள்ளன. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

அண்மையில் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கான ஐந்து நாள் பயிற்சிக் கருத்தரங்கில் ஆரம்ப உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்,

இந்த நாட்டின் தேசபிதா எனக் கூறப்படும் டி. எஸ். சேனநாயக்காவினாலும், அவரது ஐ.தே.க. கட்சியினாலுமே நம்மவர்களது வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. எம்மவர்கள் அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர். இருந்தும் அதே ஐ.தே கட்சியிடமிருந்து இழந்த உரிமைகளை நாம் பெற்றுக்கொண்டோம்.

நான் தோட்டப் பகுதிக்கு செல்லும் போதெல்லாம் மக்கள் என்னிடம் நூற்றுக்கணக்கான கடிதங்களை கொடுக்கின்றனர். எனவே அவர்களிடம் சில குறைகள் இருந்து வருகின்றன என்றார்.

## இன்றைய நிகழ்வுகள்

குருநகர் புனித யாகப்பர் ஆலய புனர்நிர்மாண நிதிக்காக பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி மீண்டும் நடாத்தப்படவுள்ளது. இன்றைய போட்டியில் சென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் விளையாடவுள்ளது. சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளது.

மகளிர் கல்லூரி மாணவி செல்வி பு. ரூபிணி முதலாமிடத்தையும், செங்குந்தா இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் கு. தனேஸ்வரன் இரண்டாமிடத்தையும், கன்னியர் மடம் மகாவித்தியாலய மாணவி செல்வி ஜெ. மேரி மிலானி மூன்றாமிடத்தையும் பெறத் தெரிவாகியுள்ளனர்.

மற்றும் மாவட்டரீதியில் போட்டித்திட்டத்தில் ஒவ்வொரு கோட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மிகவிரைவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மேற்படி போட்டித்திட்டம் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப் படுவதால், அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# காட்டு யானைகள் தாக்கி 6 தமிழ் அகதிகள் மரணம்

(மட்டக்களப்பு)

மதம் கொண்ட காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் ஆறு அகதி மக்கள் பலியானார்கள். இருபத்தாறு வீடுகள் சேதமாகின, ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் இறந்தன.

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு உறுகாமம் இராமகிருஷ்ண கொலனிக்குள் புகுந்த 50க்கு மேற்பட்ட காட்டு யானைகள் அட்டகாசம் செய்த போதே இந்த அனர்த்தம் நேர்ந்தது.

ஒரு குழந்தை உட்பட ஆறு அகதிகள் இறந்துள்ளனர். இவர்களில் இரு பெண்களும் அடங்குவர்.

யானைகளின் அட்டகாசம் அங்கு இடம் பெறுவதை அடுத்து சுமார் 10 நாட்களாக அப்பகுதியைச் சேர்ந்தவர்களில் பலர் இரவு வேளைகளில் பாதுகாப்பு கருதி வேறிடங்களில் தங்கி வந்தனர். இதன் காரணமாக உயிர் இழப்பு குறைந்தது என தெரிவிக்கப்பட்டது.

# கிராம வறுமை அதிகரிப்பு சிறிலங்காவில் இருக்கிறது

## ஐ. நா. ஆய்வில் கண்டுபிடிப்பு

கிராம வறுமை கடுமையாக அதிகரித்துள்ள ஐந்து நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று என்று ஐ. நா. சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியம் மேற்கொண்ட ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

114 வளர்முக நாடுகளில் ஆய்வை மேற்கொண்ட சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியம், கடந்த 20 ஆண்டுகாலப் பகுதியில் சிறிலங்கா, சாம்பியா, மாலி பிரேசில், கென்யா ஆகிய நாடுகளில் கிராம வறுமை மிகக் கடுமையாக உள்ளதாக அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டில்


# வயிற்றோட்ட நோய்க்கு 1271 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்தியஅதிகாரிகள் பிரிவில் கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் கடந்த ஆண்டு வயிற்றுளைவு நோய்க்கு1271 பேரும் செங்கண்மாரி நோய்க்கு 165பேரும் இலக்காகியுள்ளனர் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு ரீதியாக விவரம் வருமாறு: சாவகச்சேரி செங்கண்மாரி 110, வயிற்றுளைவு 818, கோப்பாய் செங்கண்மாரி 24, வயிற்றுளைவு 77, பருத்தித்துறை வயிற்றுளைவு 83, மானிப்பாய் செங்கண்மாரி 197, வயிற்றுளைவு 31 தெல்லிப்பழை உடுவில் வயிற்றுளைவு 96 (கி)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:-
07.12 1915

உதிர்வு:-
20.02.1992

திதி:-
28-02-1994

## K.V.S. நாகலிங்கம் (சாமியார்)

வாழ வழிகாட்டி - எம்மை
வையகத்தில் இருத்தி விட்டு
விண்ணகம் நோக்கி - நீங்கள்
விரைந்தது ஏன் ஐயா!
அஞ்சாத நெஞ்சுடனும்
அன்பு மொழியுடனும்
மங்காப் புகழுடனும்
மனைவி மக்கள், மருகர், பேரருடன்
மகிழ்ந்திருந்த நாள்கள் - எல்லாம்
மறைந்ததே இரண்டாண்டாய் - ஐயா!
மதி மயங்கி மனமுடைந்து
மானிடராய் வாழ்கின்றோம்
கண்முன் வைத்திருந்தோம்
கடவுளாய் மதித்திருந்தோம்
கடமைகளைத் தான் செய்ய
கம்பீரமாய் இருந்தோம்
கண்ணிலே கண்டதில்லை - உங்கள்
கடமைகளைச் செய்யவில்லை
காடையர் சூழ்ந்ததினால்
கடைசி வரை காத்திருந்தும்
கண்ட பலன் ஏதும் இல்லை.
ஊர், உடைமை, உறையுள் இழந்து
உயிருக்குயிரான உங்களையும் இழந்து
மண்ணிலே இருக்கும் உங்கள்
மனைவி, மக்கள், மருகர் படும் துயரம்
விண்ணிலே இருக்கும் ஐயா நீங்கள் அறிவீரோ!

தகவல்:-
நா. தடாதகைப்பிராட்டி
(மகள்)
புனிதாகட்டிடம்,
536/1, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

நாளாந்தம் வாடி நிற்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(7629)

சிந்தனைக்கு

தேனீயைப் போல நாமும் உழைப்பை நமது பொழுது போக்காக ஆக்கித் கொள்ள வேண்டும்.

-- ஒலிவர் கோல்ட் ஸ்மிற்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-02-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## புதிய அழுத்தங்கள்

தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைப்பது; அதன் அடிப்படையை அழித்து விடுவது என்பதில் சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதும் குறியாகவே உள்ளது. பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை, போக்குவரத்துத்தடை, கடல் வலயத் தடைச் சட்டம் என்பவற்றால் ஏற்கனவே சிதைந்து போயுள்ள தமிழர் பொருளாதார வாழ்வில் மீண்டும் மீண்டும் சுமைகளை ஏற்றுவதற்காக அரசாங்கம் மேலும் புதிய வழிகளை அறிமுகப்படுத்த முற்படுகின்றது.

இதன் ஓர் அம்சமாகவே, வடக்கே அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கான கப்பற் கட்டணத்தை தமிழ் மக்களிடம் இருந்தே அறவிட எண்ணியது. ஆனால், இதுதொடர்பாக உருவாகிய நெருக்கடிகளினால் அதனைக் கைவிட்டது. இருப்பினும் வேறு வழிகளில் தனது நடவடிக்கைகளை அரசு தொடர நினைப்பதே மீனவருக்கான நிவாரண வெட்டு, இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் குடியிருக்க மறுப்போருக்கான நிவாரண வெட்டு என்பவையாகும்.

ஆனால், தனது நடவடிக்கைக்கு அரசாங்கம் காரணமும் காட்ட முற்படுகின்றது. இதில், மீன்பிடிக்க அரசாங்கம் போட்டிருந்த தடை உத்தரவை விலக்கிக் கொண்டுள்ளமையும் ஒன்றாகும். அதாவது, சட்டபூர்வமாக கரையோரங்களில் மீன்பிடிக்க தற்பொழுது மீனவர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் இது எந்தளவிற்கு நடைமுறையில் அரசாங்கத்தால் கடைப்பிடிக்கப்படும் என்பதே கேள்வியாகும். சிறிலங்கா அரசியலமைப்புச் சட்டத்தைப் பொறுத்து இலங்கையில் வாழும் சகல பிரஜைகளும் சம அந்தஸ்தும் உரிமையும்கொண்டவர்கள். ஆனால், இங்குசிறுபான்மையினர் ஒடுக்கப்படுவதும், இனப்படுகொலைக்கு உள்ளாவதும் திட்டமிட்டவாறு நடைபெறுகின்றன. இந்நிலையில் மீன் பிடிக்க வழங்கப்படும் சட்டபூர்வ அனும

# ஏப்ரோன் மசூதியில் பாலத்தீனியர் படுகொலை
# மேற்காசிய சமாதான முயற்சிக்கு ஆப்பு

இஸ்ரேலிய யூத இனத்தைச் சேர்ந்த தனிஒரு மனிதனால் 55 அப்பாவி பாலத்தீனியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இஸ்லாமியரின் ரம்ழான் மாதத்தில் மசூதியில் வழிபாட்டில் இருந்த அப்பாவி பாலத்தீனியர்களை யூத இனக்கொலைஞன் கொலை செய்திருப்பது இக்கொலையின் தீவிரத்தை இரட்டிப்பாக்கின்றது. இறைவழிபாட்டிலிருந்தவர்கள் கொல்லப்பட்டது கொடூரமானது.

1967இல் இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்கும் நடந்த போர் மூலம் கைப்பற்றப்பட்ட பகுதி பாலத்தீனியர்களின் மேற்குக்கரைப்பகுதி. இப்பகுதியில் நடந்த பெரிய படுகொலை இதுவாகும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் உள்ள இப்பகுதியில் சுமார் ஓர் இலட்சத்து 20ஆயிரம் யூதர்களை இஸ்ரேல் அரசு குடியேற்றியுள்ளது தற்போது மேற்குக் கரையில் பாலத்தீனியர்களின் சுயாட்சி தோன்ற விருப்பதால் தமது நிலை எப்படியாகுமோ என அஞ்சும் இப்பகுதியில் உள்ள யூதர்கள், இஸ்ரேல்- பி.எல்.ஓ ஒப்பந்தத்தைக் குலைக்கமுயற்சிக்கின்றனர். பி. எல்.ஓ ஆரம்பிக்கும் பாலத்தீன சுயாட்சி மூலம் தாம் சிறுபான்மையினராகி விடுவோம் எனக் கருதும் இந்த யூதர்கள் இஸ்ரேல் -பி.எல் ஓ ஒப்பந்தத்தைக் குலைக்கும் வகையில் சமீபகாலமாக வன்முறையிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வன்முறையின் தற்போதைய வெளிப்பாடே மசூதி படுகொலைச்சம்பவம்ஏப்ரோன்எனும் இடத்திலுள்ள இந்த மசூதியை இஸ்ரேல் இராணுவம் மூன்று புறங்களிலும் சுற்றிக் காவல் நின்றபோதிலும் கொலையாளி மசூதியினுள் நுழைந்து இப்படுகொலையை நிகழ்த்தியிருப்பதால் இப்படுகொலையை நடத்த இராணுவம் உடந்தை என பாலத்தீனியரின் குற்றச்சாட்டு நியாயமாகவே படுகின்றது.

இராணுவத்தில் வைத்தியராக பணிபுரிந்தவரே இந்த புதிய கொலையாளி கோட்சின். இதன் மூலம் இஸ்ரேலிய இராணுவம் பாலத்தீனியர் மீது கொண்ட வெறுப்பை இச்சம்பவம் காட்டுகிறது. கொலையாளி 10 நிமிடங்கள் மசூதியினுள் நின்று சரமாரியாக சுட்டு சுமார் 50 பேரை கொன்றது வரை மசூதியினுள் எட்டிப்பார்க்காத இஸ்ரேல் இராணுவத்தின் போக்கும், இப்படுகொலையைத் தொடர்ந்து பாலத்தீனியர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இஸ்ரேல் இராணுவம்நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 10 பாலத்தீனியர்கள் பலியானதும் இஸ்ரேல் இராணுவத்தின் பாலத்தீன வெறுப்புணர்வைக்காட்டுகின்றது.

மசூதி படுகொலை குறித்து ஐ நா. பாதுகாப்புச் சபை விவாதித்து என்ன முடிவுஎடுப்பினும் இஸ்ரேலை ஐ. நா. சபையால் எதுவும் செய்ய முடியாது என்பதே நடைமுறை உண்மை. ஐ. நா. சபையின் பாதுகாப்பில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை கொண்டுவர வேண்டும் என பி எல். ஓ இப்போது விடுக்கும் அழைப்பிற்கு இஸ்ரேல் இணங்கப் போவதில்லை பாலத்தீன மக்கள் தமது பகுதியில் ஆயுதங்களின்றி வாழும்போது யூதர்கள் மட்டும் ஏன் ஆயுதங்கள் வைத்திருக்க வேண்டும் என பி- எல் ஓ- தலைவர் அரபாத் கேட்கும் கேள்வியையும் இஸ்ரேல் பொருட்படுத்தாது.

அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணிந்து பி எல்- ஓ- வாஷிங்டனில் இஸ்ரேலுடன் பேச்சுக்களை தொடரப்போவதும் இஸ்ரேலும் போனால் போகிறது இறைச்சித்துண்டு என பி- எல்- ஓ வின் சுயாட்சிக்கு இணங்குவதும் தான் வரும் நாட்களில் நடக்கப் போகின்றது. இரு வாரத்திற்குப் பின் படுகொலை மறக்கப்படுவதும் அரபாத்தும் பி- எல்- ஓ வும் மீண்டும் சமரசப் பேச்சை ஆரம்பிப்பதும் பி- எல்- ஓ- செய்யப் போகும் காரியங்கள். ஆனால் இப்படுகொலை மூலம் அரபாத்திற்கு பாலத்தீன மக்களிடம் உள்ள செல்வாக்கு சரியலாம்- இதற்கு மாறாக இஸ்ரேல் - பி. எல். ஓ. ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்க்கும் ஹமாஸ், பி.எல். எப். பி-, டி - பி- எல்- பி-, ஐ. ஜே- எம்- பி- எனும் பாலத்தீன தீவிரவாத அமைப்புகளுக்கு பாலத்தீனியர்களிடையே செல்வாக்கு அதிகரிக்கலாம். இந்த அமைப்புகள் படுகொலைக்கு பழிவாங்கப் போவதாக அறிவித்தமை ஆத்திரத்தில் உள்ள பாலத்தீனியரைச் கவரலாம்- அரபாத்தைத் தாம் கொல்வோம் எனவும் இந்த அமைப்புகளில் சில கூறியிருப்பது அரபாத்திற்கு சிக்கலைத் தரும்-

இப்படுகொலைகளுக்கு பின்னரும் அரபாத் இஸ்ரேலுடன்பேசச்சென்றால் அரபாத் ஒரு துரோகி என தீவிரவாதிகள் அறிவித்தால் மக்களும் அதை நம்ப மறுக்க மாட்டார்கள். எனவே இப்படுகொலையால் பலமுனையில் சிக்கலுக்குள்ளாகியிருப்பவர் யாசிர் அரபாத்தே.

இஸ்ரேல் தனக்கு இக்கொலையுடன் சம்பந்தமில்லை எனக் கூறினும் இஸ்ரேல் இப்படுகொலைகளை தடுத்து நிறுத்தி கடுமையாக நடந்து கொள்ளவில்லை எனும் உண்மையை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்-

பி- எல்- ஓ- நடத்திய சில வன்முறைக்காக பி- எல்- ஓ- அமைப்பையே தடை செய்த அமெரிக்கா எதிர்பார்க்கப்பட்டதைப்போல் தற்போது மசூதி படுகொலை குறித்து பட்டும்படாததுபோல் நடப்பது இஸ்ரேலுக்கு அமெரிக்கா அழுத்தமான தண்டனை ஏதும் வழங்காது சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியைக் காட்டி ஏமாற்றுவது கடைந்தெடுத்த அமெரிக்க இரட்டை வேடம்.

மொத்தத்தில் ஏப்ரோன் மசூதி படுகொலை இஸ்ரேல் பாலத்தீனிய பேச்சுக்களில் தாக்கம் எதையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றே நம்பலாம்- வழக்கம்போல் ஒடுக்கப்படும் பாலத்தீன இனத்தின் ஒடுக்கப்படும் வரலாற்றின் ஒரு புதியசேர்க்கையே ஏப்ரான் மசூதிப் படுகொலை

ஏ. எப். பி.

# பாலத்தீனியர் பாதுகாப்புக்கு உலக நாடுகள் முன் வரட்டும்

## யாசிர் அரபாத் கோரிக்கை

(ரியூனிஸ்)

பாலத்தீனியரின் பாதுகாப்பு இப்போது உலகநாடுகளிடமே விடப்பட்டுள்ளது. எனவே பாலத்தீனியர்களைப் பாதுகாக்க உலகநாடுகள் முற்பட வேண்டும் என்று பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் கூறியுள்ளார்.

ஏப்ரோன் மசூதியில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தை அடுத்து ரியூனிசில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில்' கைப்பற்றப்பட்ட அரபுப் பகுதிகளில் குடியேற்றப்பட்டிருக்கும் யூதர்களின் வசமுள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டியதன் அவசியத்தை இச்சம்பவம் நன்கு உணர்த்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

த்துவதற்காக கெய்ரோ, வாஷிங்டன் போன்ற நகரங்களில் இஸ்ரேலிய நகரங்களில் இஸ்ரேலிய அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கும் பாலத்தீனிய பிரதிநிதிகளைத் திரும்பப்பெறும்

## பாகிஸ்தான் பயிற்சி

(டில்லி)

காஷ்மீரில் உள்ள ஹஸ்ரத் பால் மசூதியில் ஒழுங்கான பிரார்த்தனைகளை நடத்துவதற்கு இடமளிக்க வேண்டாம் எனப் பாகிஸ்தான் புலனாய்வு நிறுவனம் தீவிரவாதிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது இதனை இராணுவத்தினர் இடைமறித்துக் கேட்டதாக காஷ்மீரின் ஆளுநரான ஓய்வுபெற்ற ஜெனரல் கிருஷ்ணராவ் தெரிவித்தார்.

சுமார் முப்பதாயிரம் காஷ்மீர் இளைஞர்களுக்கு பாகிஸ்தான் கடந்த நான்கு வருடங்களாகப் பயிற்சி அளித்து

யில் மீன் பிடிக்க வழங்கப்படும் சட்டபூர்வ அனுமதி என்பது எந்தளவிற்கு நம்பிக்கையூட்டக் கூடியது.

இதற்கு எடுத்துக் காட்டாக சிறிலங்கா கடற்படையினரால் தமிழ் மீனவர்கள் பல வருடங்களாக படுகொலை செய்யப்பட்டு வருவதையே சுட்டிக் காட்டலாம். கரையோரப் பாதுகாப்புத் தடைச்சட்டம் கடந்த வருட மத்தியிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், அதற்கு முன்னர் கடலில் மீனவர்கள் படுகொலை செய்யப்படவில்லையா? அல்லது தாக்கப்படவில்லையா? அவர்களின் தொழில் உடைமைகள் நாசமாக்கப்பட வில்லையா? இவை சட்டத்தை மீறிய செயல் இல்லையா?

இந்நிலையில் கரையோரப் பாதுகாப்பு தடைச் சட்டத்தை நீக்கி மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிப்பதால், அவர்களின் பாதுகாப்பு என்ன விதத்தில் உறுதிப்படுத்தப்படும்? பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளிலேயே குண்டுவீசும் சிறிலங்கா அரசு இதனை எவ்வாறு கடைப்பிடிக்கும்?

இதேபோன்றே இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசங்களில் உள்ளவர்கள் தமது பகுதிகளில் மீளக்குடியமராது விட்டால் நிவாரணம் வெட்டப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பாகும். மக்கள் பொதுவாக தாம் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ முடியும் என்ற ரீதியிலேயே தமது வாழ்விடத்தைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்நிலையில், ஒருவரை இன்ன இடத்தில் தான் வாழ வேண்டும் என நிர்ப்பந்தப்படுத்துவது அவர்களின் அடிப்படை உரிமைகள் சகலதையும் மறுப்பதற்கு ஒப்பானதாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம் அதனையே இன்று நிபந்தனையாக வைத்து தனது குறிக்கோளை எட்டப் பார்க்கின்றது. உயிர்ப் பாதுகாப்பா? நிவாரணமா? என்ற அவல நிலையை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வாழ விரும்பாத மக்களின் நிவாரணத்தில் பெரும் வெட்டை ஏற்படுத்த முனைகின்றது.

அதாவது தமிழரின் பொருளாதாரச் சுமையை எவ்வாறேனும் அதிகரிப்பதோடு போருக்கான ஒதுக்கீட்டையும் அதிகரிப்பதே அரசின் குறிக்கோளாகும். இதன் மூலம் தமிழரை நலிவடையச் செய்து இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வைக் காண்பதோடு, எதிர்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தை ஓர் ஆரோக்கியமற்ற சமூகமாக உருவாக்குவதே அரசின் குறிக்கோளாகும்.

இவ் அழுத்தங்கள் இத்துடன் மட்டும் நின்றுவிடும் என்பதல்ல. இராணுவ ரீதியாக வெற்றிகாணமுடியாது என்ற நிலை உருவாக உருவாக சிறிலங்கா அரசின் இவ்வாறான பொருளாதார ரீதியாக தமிழரை நலிவடையச் செய்யும் ஒடுக்கு முறையும் அதிகரித்தே செல்லும். இந்நிலையில், தமிழ் மக்கள் சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து மேலும் பல ஒடுக்கு முறை அறிவிப்புக்கள் வரும் என்றே எதிர்பார்க்க வேண்டும். இதே வேளை இதிலிருந்து தம்மையும் தாயகத்தையும் காக்கவும் தயாராக வேண்டும்.

# பாலத்தீனியர்படுகொலைக்கு இந்தியா கண்டனம்

(டில்லி)

ஜோர்தான் ஆற்றின் மேற்குக் கரைப் பகுதி நகரமான ஏபரோனில் பாலத்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக புதுடில்லியில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டுள்ளது மேலும் இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மேற்காசிய சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் ஏற்பட்டு விடக் கூடாது எனவும் மேலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய சூழல் குறித்து விவாதம் நட

அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

வருகிறது என அவர் குற்றஞ் சாட்டினார்.

# தென்னாபிரிக்க தங்கச்சுரங்க அணைக்கட்டில் உடைப்பு

## 13பேர் பலி; அமில கழிவினால் பலர் எரிகாயம்

தென்னாபிரிக்காவில் தங்கச் சுரங்கம் ஒன்றின் அணைக்கட்டு உடைந்ததினால் வேர்ஜினியா நகரம் அமிலக் கழிவுகள் கொண்ட பெருவெள்ளத்தில் அமிழ்ந்துள்ளது. இந்த அணை உடைப்பின் காரணமாக 13 பேர் கொல்லப்பட்டனர். அறுபது பேர் காணாமல் போயுள்ளனர்.

வேர்ஜீனியாவின் சுரங்கத் தொழிலாளர் சமூகம் சேறு நிறைந்த வெள்ளத்தினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டு உடைத்து இரு தினங்களுக்கு மேலாகியுள்ளது. இலட்சக்கணக்கான தொன் அமிலக் கழிவுப் பொருட்கள் நகரத்திற்குள் புகுந்துள்ளன.

புதையுண்டவர்களை மீட்க இரவுபகலாக தேடுதல் நடைபெறுகிறது ஆஸ்பத்திரிகளில் பலர் சிகிச்சை பெற்று வருகின்றனர் தங்கத்தைப் பிரித்தெடுக்கும் அமிலம் சகதியுள் கலந்து இருப்பதனால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. பலர் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# இந்தியாவும், பாகிஸ்தானும் படைகளை மீளப் பெறட்டும்

## காஷ்மீரின் புதியகட்சி பேச்சாளர்

(சிறீநகர்)

இந்தியாவும், பாகிஸ்தானும் தத்தம் படைகளை காஷ்மீரிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளட்டும். அப்போது காஷ்மீர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் இரு நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி சர்ச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும் பேச்சுக்களை ஆரம்பிப்பர்.

இவ்வாறு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள புதிய ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் பேச்சாளர் இக்பால் குறைஷி கூறியுள்ளார்.

சமாதான ஜனநாயக அடிப்படையில் காஷ்மீர் சுதந்திரம் பெற வேண்டும் என்பதே தமது கட்சியின் நோக்கம் எனக் குறிப்பிட்ட அவர் கட்சிக் கொள்கை பற்றி மேலும் விபரிக்கையில், காஷ்மீரின் ஒரு பகுதியைத் தனது பகுதியாக இந்தியா கூறுகிறது. மற்றப் பகுதியைப் பாகிஸ்தான் தனது உயிர்நரம்புஎன கருதுகிறது எனினும்காஷ்மீர் மக்கள் உண்மையில்தமதுசுய நிர்ணய உரிமையையே எதிர்பார்க்கின்றனர்.

இதற்காகப் புதிய கட்சி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்கள் நடத்தி சர்வதேச விழிப்புணர்வை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டார்.

# பாலத்தீனியர் ஆயுதமேந்தி போராட வேண்டும்

## ஈரான் ஜனாதிபதி

(தெஹ்ரான்)

பாலத்தீன மக்கள் தமது விடுதலைக்காக ஆயுதங்கள் ஏந்த வேண்டும் என்பதையே ஏப்ரோன் மசூதி படுகொலை காட்டுவதாக ஈரானிய ஜனாதிபதி ரப்சன்நானி கூறியுள்ளார்.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் நேற்று நடந்த வன்முறைச் சம்பவங்களின்போது இஸ்ரேலிய இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு பாலத்தீனியர்கள் பலியாகினர் நால்வர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாலத்தீனியர் படுகொலை பற்றி ஐ. நா. பாதுகாப்புச்சபை ஆராயும்

(டெல் அவிவ்)

மேற்கு கரைப் பகுதியிலுள்ள பகுதி ஒன்றில் ஐம்பது பாலத்தனியர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை கூடவுள்ளது. இந்தச் சிறப்புக் கூட்டம் நடாத்தப்படவுள்ள அதே வேளை இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக்கொள்ளும்படி ஐ. நா. செயலாளர் இஸ்ரேல அரசுடன் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

இதேவேளை இப் படுகொலைச்சம்பவம், மேற்காசியாவில் நிரந்தர அமைதி ஏற்படுவதற்கு குந்தகம் விளைவிக்கும் என்று ஜோர்தான் மன்னர் உசைன் கூறியுள்ளார்.

மேலும் இஸ்ரேலிய- பாலத்தீனிய பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னர் இடம்பெற்ற மிக மோசமான சம்பவமாக இது கருதப்படுகின்றது.

இந்தப் படுகொலையை நிகழ்த்திய இஸ்ரேலிய யூதர் ஓர் அமெரிக்கப் பிரஜை என்றும் அவர் இராணுவ சீருடையில் காணப்பட்டார். என்றும் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் நடந்த பகுதியை இஸ்ரேலிய படையினர் முற்றாக மூடியுள்ளனர்'

ஆயுதம் தாங்கிய யூதர்ஒருவர் தொழுகையின் போது மசூதிக்குள செல்ல அனுமதிக்கப்பட்டது எவ்வாறு என்றும் பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கேள்வி எழுப்பியுள்ளார்

இதனிடையே இஸ்ரேலுக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்குமான உறவு சீர்கெடாமல் இருக்கும் பொருட்டு அமெரிக்க அதிபர் தலையிட்டு இருப்பதோடு இருதரப்பையும் பேச்சுநடாத்த வாஷிங்டன் வரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

# குழந்தைகளை குண்டு வீசி கொன்ற தாயார்

(வாஷிங்டன்)

குடும்பத்தில் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக தமது இரு பிள்ளைகளை பெண் ஒருவர் குண்டுவீசி கொலை செய்துள்ளார் அமெரிக்காவின் லோங் பிரான்ச் என்ற பகுதியில் இச்சம்பவம்நடைபெற்றது தமது கார் மீது இப்பெண் குண்டை வீசியதில் அவரின் இரு பிள்ளைகளும் பலியாகினர்.

மாரியா டால்வோ எனும் இப்பெண் தமது கணவர் வாழ்ந்து வரும் அவரின் உறவினர் வீட்டிற்கு காரில் சென்று குழந்தைகள் இருந்த கார் மீது குண்டுகளை வீசினார். இப்பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். குற்றச்சாட்டு எதுவும் இன்னமும் சுமத்தப்படவில்லை.

## அக்னியை விரும்பவில்லை

(டில்லி)

2000 கிலோ மீட்டருக்கு மேல் அணு ஆயுதங்களுடன் பாயக்கூடிய அக்னி ஏவுகணைகளை இந்தியா தனது இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதனால் அமெரிக்கா கவலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சகல சாதக பாதக அம்சங்களை இந்தியா பரிசீலிக்கவுள்ளது-

# போலிஅடையாளஅட்டையைபாவித்து வெளிநாட்டு "ராவ்ட்" மாற்றம்

வெளிநாடுகளில் உள்ள உறவினர்களால் வடபகுதியைச் சேர்ந்த இருவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பணப் பத்திரத்தை (ராவ்ட்) போலி தேசிய அடையாள அட்டையை உபயோகித்து கொழும்பு வங்கியில் பணமாக்கியசெய்தி தபால் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது.

சமீபத்தில்இடம்பெற்ற இந் நடவடிக்கையைஅடுத்து தபாலக அதிகாரி ஒருவர் பணம் அனுப்புவோர் அவதானமாகச் செயற்படும்படி கேட்டுள்ளார்.

வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், உரும்பராய் பகுதியைச்சேர்ந்த ஒருவருக்கும் அண்மையில் பணப்பத்திரத்தின்மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பணத்தை போலி அடையாள அட்டை கொண்டு மாற்றப்பட்டுள்ளது.

உரியவரின் பெயரையும், வங்கிக் கணக்கு இலக்கத்தையும் பணப்பத்திரத்தில (ராவ்ட்) போட்டு அனுப்பும் பட்சத்தில் இந்த மோசடி நடவடிக்கையை தடுக்கலாம் எனஅந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட மோசடி நடவடிக்கை தொடர்பாக தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## நூறு ஓட்டங்கள் பெற்றார்

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நேற்று இடம்பெற்ற துடுப்பாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்து வீரர் டோ, டிமோசிலின் ஆட்டமிழக்காமல் 100 ஓட்டங்களை (சதம்) எடுத்துள்ளார். இவர் 15வயதில் இவ்வாறு நூறு ஓட்டங்களை நேற்று பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது இவ் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

## மெய்வல்லுநர் போட்டி

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பி.ப. 2மணிக்கு மேற்படி வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது அதிபர் திரு. வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மெய்வல்லுநர் போட்டியில் நல்லூர் யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# மாவீரர்கள் நினைவாக அடம்பனில் நிகழ்வுகள்

1984-ம் ஆண்டு முதல் 1993-ம் ஆண்டு வரை முதலாம் இரண்டாம் மாதங்களில் சிறிலங்கா இந்திய இராணுவங்களுடன் போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வு அடம்பன் வட்டக்கண்டலில் இடம் பெற்றது. இந்நிகழ்வின்போது காலை 8 மணியளவில் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய மூன்று விளையாட்டுக்களும் இடம்பெற்றன. இந்நிகழ்ச்சியின்போது மங்களவிளக்கை அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியை மன்னார் மாவட்ட சிறப்புத்தளபதி திரு செயமாலை அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து முதலாவது உதைபந்தாட்ட நிகழ்வையும் ஆரம்பித்து வைத்தார்.

இவ் விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டக், கரபந்தாட்டப் போட்டிகளில் முதலாவது இடத்தை நாவாந்துறை சென்மேரின் விளையாட்டுக் கழகம் பெற்றது. வலைபந்களும் தளபதி லக்ஸ்மன் அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்தும் 1-ம் 2-ம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்ப் பட்டியல் வாசிக்கப்பட்டது. பின் மாவீரர்களின் உருவப்படங்களுக்குப் பெற்றோரால் ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப் பட்டது. தொடர்ந்தும் அடம்பன், நானாட்டான் வட்ட இணைப்பாளர் திரு. அல்வின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் கடற்புலிகளின் பள்ளமடு வட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காங்கேயன். மாணவர் அமைப்புத் துணைப் பொறுப்பாளர் திரு. ரவிராஜ், மன்னார் மாவட்டதுணை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. நந்தகுமார், மன்னார் மாவட்டத்தளபதி திரு. லக்ஸ்மன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். இதில் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் உரையாற்றுகையில், இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு தமிழனும் களத்திலே நின்று போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம். எதிரியானவன் எமது மண்ணுடைய காலத்தில் நாம் தேசத்தை மீட்டெடுக்க வேண்டுமெனவும் கூறினார் தொடர்ந்து பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. பின் கலை நிகழ்ச்சிகளும் ஒப்பறேசன் தவளை, 12-ம் மாத ஒளிவீச்சு ஆகிய இரண்டு வீடியோ படங்களும் காண்பிக்கப்பட்டன.

# வேலையற்ற பட்டதாரிகள்; பயிற்சி வழங்க நடவடிக்கை

அரசாங்க, தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு வழங்குவதுபற்றிஆராயவெனவேலையற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப் பட்ட சகலரும் குறிப்பிட்ட கால பயிற்சிக்குட்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுவர் எனவும் பயிற்சிக்காலத்தில் திரட்டிய மாதாந்த அலவன்ஸ் ஆக 2500 ரூபா வழங்கப்படும் எனவும் அரசாங்க, தனியார் துறைகளிலுள்ள வெற்றிடங்களில் இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர் எனவும் அறிவிக்கப்படுகிறது. இவர்கள் தமது விண்ணப்பங்களை மார்ச் 31க்கு முன் அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் ஈழநாதம் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# கம் உதாவ செலவீடு வேறு கணக்கில் பதிவு

# சிங்களவரை ஒன்றுபடச் சொ[...] ஈழவாதத்தை நியாயப்படுத்[...]

வாசுதேவா நாணயக்கார கூ[...]

(கொழும்பு)

"பெரும்பான்மையினர் ஒன்றுபடவேண்டும் எனக்கூறி சிறுபான்மையினரை பிரித்துப் பார்க்கும்போது ஈழவாதம் நியாயப்படுத்தப்படுகின்றது" என வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கிழக்கிலிருந்துவரும் செய்திகள் கவலை தருகின்றன. கிழக்கில் தேர்தலை படையினர் நடத்த முற்படுகின்றனர். கிழக்கின் இன்றைய நிலை நாளை தெற்கிலும் ஏற்படலாம். படையினரை தேர்தலில் பயன்படுத்துவது நல்லதல்ல. படையினர் முகாமில் இருக்கவேண்[...] தல் நடத்[...] படையினரிட[...] கூடாது.

பேரினவாத[...] பேசுபவர்கள் [...] த்தவர்களை[...] காலங்களில் ஆ[...] கொன்றவர்க[...] தேவ நாணய[...] தெரிவித்தார்.

# விசா இன்றி தங்கியிருந்த 20,000பேர் வெளியேற்றம்

இலங்கையில் விசா இன்றி தங்கியிருக்கும் 20,000 வெளிநாட்டவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

# வலதுசாரி தீவிரவாதிகள் தெ. ஆபிரிக்காவில் கலகம்

(ஜொகனர்ஸ்பேர்க்)

வலதுசாரி வெள்ளையர்கள் தென்னாபிரிக்க அரசினதும் ஆபிரிக்க தேசிய காங்கிரசினதும் சமரசத்தை நிராகரிப்பதற்கு அடையாளமாக இரு தென்னாபிரிக்க நகரங்களுக்கு உரிமைகோரி ஆயுதங்களுடன் வாகனங்களில் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தங்களது வருங்கால ஆபிரிக்கனர் தாயகம் தமக்கு சேர வேண்டும் என்ற ஆர்ப்பாட்டத்துடன் இவர்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர். கறுப்பர் அரசின் கீழ் இருப்பதைவிட யுத்தத்திற்கு செல்லத்தயார் என தீவிர வலதுசாரி வெள்ளையர்கள் கூறியுள்ளனர். எமது சொத்தை நாம் எடுத்துக் கொண்டு அதைக் காக்க போராடுவோம் என வலதுசாரி தீவிரவாதத்தலைவர் கூறினார்.

நாஸி ஆதரவு ஆபிரிக்கனர் எதிர்ப்பு இயக்க கொடிகளுடனும் முன்னாள் சுதந்திர போயர் குடியரசான ஓரேஞ் பிரிஸ்டேட்டின் கொடிகளுடனும் ஆயுதம் தரித்த தீவிரவாத வெள்ளையர் சென்றனர்.

## மகளிர் தின[...]

# துறைத் [...] பதவி வி[...]

(யாழ்ப்பா[...]

யாழ்ப்பாண[...] கழகத்தில் கலை[...] சேர்ந்த துறைத்[...] ஒருவர் தனது ர[...] வைச் சமர்ப்பி[...] எனத் தெரியவ[...]

இரு விரிவு[...] நியமிப்பதில் து[...] வருக்கும், பல்க[...] நிர்வாகத்துக்கும் அபிப்பிராய பே[...] ராஜினாமாவுக்[...] எனப் பல்கலைக்[...] ரத்தினர் தெரி[...]

# கசிப்பு வைத்திருந்தவ[...] 70,000 ரூபா அபரா[...]

அல்வாய் மேற்கைச் சேர்ந்த ஒருவர் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பருத்தித்துறை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் 5 போத்தல் நிறமூட்டாத கசிப்பும், 2போத்தல் நிறமூட்டிய கசிப்பும் வைத்திருந்தமைக்காக நீதிமன்றம் 70 ஆயிரம்ரூபா [...] செலுத்துமாறு [...] யிட்டது.

குற்றத்தை ஒப்[...] இந்நபர்பணத்தை[...] நீதிமன்றில் செலு[...]

## வடபகுதி

வந்துள்ளது.

வருமானமளிக்கக் கூடிய சிறு செயற்திட்டங்களுக்கும்,

# கள்ளவா[...] இட தய[...]

கிழக்கு மாகாண[...] ளூராட்சி தேர்[...] இராணுவத்தினரு[...] சாரும் இரகசியம[...] யில் வாக்கு பெட[...]

தாட்டப் போட்டியில் மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவிகள் முதலாவது இடத்தைப்பெற்றனர். தொடர்ந்து இரவு 7 மணிக்கு நினைவுதினக் கூட்டம் இடம்பெற்றது. இந் நிகழ்வின்போது பிரதான ஈகைச்சுடரை சிறப்புத் தளபதி செபமாலை அவர்

ணில் ஒரு பாரிய யுத்தத்தை நடத்துவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான். இந்த நேரத்தில் எதிரியோடு போராடுவதற்கு நாம் எம்மைத் தயாராகிக் கொள்ள வேண்டுமெனவும் கூறினார். தளபதி உரையாற்றுகையில் உலகமே வியக்கும் ஒரு புனிதமான தலைவனை நாம் பெற்றிருக்கின்றோம். இத்தலைவ

## வேறு கணக்கில் பதிவு

கம்உதாவ நிகழ்ச்சிக்கு கொழும்பு மாநகரசபை செலவிட்ட நிதி பட்ஜட் திட்ட அறிக்கையில் அந் நிகழ்ச்சிக்கு செலவிடப்பட்டதாகக் காட்டப்படாமல் வேறு செலவுகளுடன் சேர்த்து காண்பிக்கப் பட்டு வந்தது என கொழும்பு மாநகரசபை ஆணையாளர் மாரலிங்க பெரேரா தெரிவித்தார்.

கொழும்பு மேயர் ரபீண சிறிராஜபக்ஷவிற்கு எதிராக மேல் மாகாணசபை சுமத்தியுள்ள 5 குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட தனிநபர் விசாரணைக் குழுமுன் மாரலிங்க சாட்சியமளித்தார்.





(பெப்ரவரி மாத உலகம்! இதோ... உங்கள் கையில்)

நீங்கள் இன்னும் பெப்ரவரி மாத உலக உலாவை வாங்கவில்லையா? ... இனியும் தாமதம் செய்யவேண்டாம்

இந்த இதழில்

- விண்வெளி ஆய்வு
- மனிதவியல் வரலாறு
- உயிரியல் வரலாறு
- முகாமைத்துவம்
- உலக விவகாரங்கள்
- வாணிகம்
- குற்றவியல்
- விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
- ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பும்
- பல்திணைப் பகுதி

பல்வேறு அம்சங்களைத் தாங்கி உலகளாவிய பொது அறிவுக் களஞ்சியமாக பைந்தமிழிலே மலர்கிறது

உலக உலா

யாழ். குடாநாட்டில் அனைத்துப் புத்தகக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

உலக உலாச் செயலகம்

144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8737)


## மகளிர் தின தெருக்கூத்து

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை தொடக்கம் விழித்தெழுவோம், பெண் அடிமை என்ற இரண்டு தெருக் கூத்துக்கள் முல்லை மாவட்டத்தில் சகல கிராமங்களிலும் முல்லை மாவட்டக் கலைபண்பாட்டுக்கழகத்தால் எழுச்சிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது.

## பெற்றுக் கொள்ளவும்

யாழ். திருக்குடும்பக் கன்னியர் பாடசாலைக்கு அண்மையில் இருந்து மூக்குக்கண்ணாடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ள முடியும்.

## பார்வையிட்டனர்

யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவத் துறை மாணவர்களால் கடந்த கிழமை நடத்தப்பட்ட கண்காட்சியில் தென்மராட்சிப் பகுதியில் உள்ள அநேக பாடசாலைமாணவர் கலந்து கொண்டுள்ளனர். இக் கண்காட்சியில் உயிரியல், சித்த மருத்துவத்துறையின் மூலிகைகளின் பண்ணை, தாவரவியல், யாழ். குடாநாட்டில் மலேரியா பரவுவதற்கான காரணிகளும் மூலிகைகளின் நன்மைகளும், சுகாதாரம், முதலுதவி போன்ற கண்காட்சி இடம் பெற்றது. இதற்கு பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (86)

மத

ன்படி பல சந்தேகங்களிலேயே முடிந்துள்ளன. தோல்வியையும் கண்டுள்ளன. புலிகள் பேச்சுக்கு வருவது என்பது அவர்கள் ஏனைய கட்சிகளை அங்கீகரிப்பதில் தங்கியுள்ளது. அவர்களை மட்டும் நாம் தலைவர்களாக கருத முடியாது. தற்போதையதேர்தலில் அவர்கள் பங்குபற்றியிருந்தால் நாம் முன்நிபந்தனைகள் விதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

மதரீதியான அமைப்புகளோ அரச சார்பற்ற அமைப்புகளோ பிரபாகரனை சந்தித்ததாக தெரியவில்லை, எனவே அவர்கள் மூலம் அரசியல் இணக்கத்திற்கு வரக்கூடிய எந்த இணக்கத்திற்கும் நாம் வரவில்லை. எனவும் தெரிவித்தார்.

வருமானமளிக்கக்கூடிய சிறு செயற்திட்டங்களுக்கும், நீர் விநியோகம், மலசலகூட வசதி மற்றும் இருப்பிட வசதி ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான திட்டங்களுக்கு மேற்படி நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரியவருகிறது.

## ஹெந்தல

என்ஜின் கோளாறு ஏற்பட்டது என்றும் இதனால் கப்பல் வருகை தாமதித்தது என்றும் அறிய முடிகிறது.

எனினும் 'மாகோ' கப்பல் நாளை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

(யோ)

## புலிகளுடன்

கடல் வலயதடைச்சட்டம் நாளை முதல் நீக்கப்படுவதாக புனர்வாழ்வு அமைச்சு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக தெரிவித்த அந்த வானொலி 1990 இல் இந்த வடபகுதி கடல்தடைச்சட்டம் அமுலுக்கு வந்ததையும் சுட்டிக்காட்டியது.

சாரும் இரகசியம... யில் வாக்கு பெ... வாக்குகளை நிர... திட்டமிட்டுள்ளதா... கட்சி தலைவி ... பண்டாரநயக்கா... துள்ளார்.

கிழக்கு மாகாண... கிய தேசிய கட்சி... லில் தோல்வி ... உறுதியானதுஎன்று... தவிர்ப்பதற்கே இந்... வழியை அக்கட்சி ... கவும் அவர் சுட்டிக்காட்... ளார்.

## விமானப்படை

நேற்றிரவு யாழ். கடல்... யில் பயணிகள் படகுமீ... த்திய விமானத்தாக்கு... உள்ளதாக பி. பி. சி. ... பிட்டது.

பூநகரி முகாம் அழி... பட்டபின் கிளாலியில் ந... பெற்ற முதலாவது விமா... தாக்குதல் இதுவெனவும் ... பவதினம் 60 படகு... சென்று கொண்டிருந்தபோ... விமானங்கள் தாக்குதலை... த்தியதையடுத்து சிலர் கட... குதித்ததாகவும் பி. பி. ... குறிப்பிட்டது.

## காணவில்லை

கோப்பாய்சந்திக்கும் உரும்பராய்க்கும் இடையில் நேற்று பி. ப. 3 மணிக்கிடையில் சில பற்றுச்சீட்டுக்களும், மாவீரர் படமும், சிறு தொகைப் பணமும் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(7635)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 27-2-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 1017

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
27-8164, 26-5517, 26-2277, 41-9211, 26-7039, 41-8155, 26-4709, 42-3419, 42-3329, 41-8031, 26-6762, 24-4265, 42-3368, 27-7740, 27-9649, 26-7525, 27-9825.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
28-9186, 26-1321, 26 5281, 24-5955, 27-5077, 24-7327, 24-4282 26-7546, 26-8751, 26-2345, 26-8497, 27-2107, 26-3177, 28-6623, 28-1636, 28-1111, 26 0573, 24-5967, 42-3114, 26-6711, 26-1221, 24-6110, 24-4467, 27-2056, 26-3475.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 61-... இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ... ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியி... பட்டது.